திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

மாலை : 9 21—10—55 : வெள்ளி : : விலை 3 அணா மலர் : 10

அலஹாபாத் பண்டிதர்

[illegible] பேச்சில் ஜோர்! ஆக்கவேலையிலே மகா மட்டம்!

[illegible] காலமாக இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் அவர்கள், நாட்டிலே மலிந்துள்ள கண்மூடி பழக்க வழக்கங்களையும் அதனை வளர்த்து வரும் ஜாதிய வெறியர்களின் ஆதிக்கத்தையும் கண்டித்துப் பேசி வருகிறார்!

பண்டிதர்—பழமை வெறியினை கண்டித்துப் பேசுவது இதுதான் முதன்முறை யென்று எவரும் கூறிட இயலாது. ஆட்சி பீடத்தின் லகானைப் பிடிப்பதற்கு முன்னர்கூட இவ்விதப் பேச்சுகளை மிக ஆவேசமாகக் கொட்டி அளந்திருக்கிறார். அதுபோலவே ஆட்சி பீடத்திலமர்ந்த பிறகு இந்த எட்டு ஆண்டுகளில், ஆண்டவன் பேரால் நடைபெறும் அநீதிகளைக் கார சாரமாகக் கண்டித்ததோடல்லாமல் இனி இவ்வித கோணங்கித் தனங்களுக்கு இடமளிக்க முடியாது என்றும் அதட்டிப் பேசி யிருக்கிறார்!

ஆனால் நேரு பண்டிதரின் ஆட்சி, இப்பழமை வெறியை ஒழித்துக்கட்ட நடை முறையில் கையாண்ட திட்டங்கள் என்ன என்பதை ஆராய்வோமேயானால், ஏதோ தனது ஆட்சியும் முற்போக்கு எண்ணம் கொண்டது என்பதை உலகத்தாருக்குக் காட்டிக் கொள்வதற்காக கடலில் பெருங்காயத்தைக் கரைத்த கதை போல சமுதாய மறுமலர்ச்சிக்கான பிரச்னைகளில் மிக மிகச் சாதாரணமான—மிதவாதத் தன்மையுடைய இரண்டொரு திட்டங்களை உருவாக்க முயற்சிப்பதும் அதே சமயத்தில் அதைப் பற்றி தப்பட்டை யடிப்பதில் மட்டும் நேரு பண்டிதரின் ஆட்சி பீடம் தனது வாயை அகல விரித்துக் காட்டுவதுமாக யிருந்து வருகிறது.

இந்தவித்தையைத்தான் சென்றவாரம் பீகார் மாநிலத்தில் கோஹறு திட்டத்தைத் துவக்கி வைத்த இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் காட்டியிருக்கிறார்! அந்தத் திட்டத்தின் பெருமையையும் அதனால் அப்பகுதி மக்களுக்கு ஏற்பட யிருக்கும் நல்வாழ்வினையும் குறிப்பிட்டு விட்டு :

"மக்கள், பிரார்த்தனை செய்வதற்காககோயில்கள், சர்ச்சுகள் குருத்துவாரங்கள் போன்ற இடங்களுக்குப் போகிறார்கள் ஆனால் உண்மையில் தொழுவதற்கான இடம் இப்பேர்ப்பட்ட பெரிய அணைகள்தான் என்பதை மீண்டும் நினைவுப் படுத்துகிறேன். மக்களின் மகத்தான உழைப்பின் மூலம் உருவாகும் பெரிய தேசிய நிர்மான வேலைகளே தொழு மிடங்களாக பாவிக்கப்பட வேண்டும். இந்த அணையிலிருந்து போகும் தண்ணீர்தான் வாழ்வின் சிறந்த சின்னமாகும்.........பீகாரிலும் நாட்டின் மற்ற பாகங்களிலும் வகுப்பு — ஜாதி வெறி உணர்ச்சி அளவு கடந்திருக்கிறது. இதனை நான் இனி சகிக்க முடியாது. ஜாதி வெறியைக் குலைத்துத் தகர்த்தெறிவேன்!"

என்று மிக ஆவேசமாகப் பேசியிருக்கிறார்! உண்மையிலேயே ஜாதிய—வகுப்பு வெறித் தன்மையும், கடவுள்பேரால் நடைபெறும் கண்மூடிப் பழக்க வழக்கங்களும் மண்மூடிப்போக வேண்டுமென்ற எண்ணம் நேரு பண்டிதருக்கு இருக்குமானால், இந்த எட்டு ஆண்டுகளில் அவரது ஆட்சி இதற்காகத் தீவிர நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாமா?

அவருக்கு அந்த எண்ணம் முழுக்க முழுக்க யிருக்கிறது, ஆனால் அவரைச் சூழ்ந்துள்ள மற்ற "தேவதைகள்" இதற்குச் சம்மதிப்ப தில்லையென்று கூறப்படுவது உண்மையாயின் ஆட்சி பீடத்தின் முதல்வர் வேலையை உதறித் தள்ளி விட்டு நாட்டின் ஒற்றுமைக்கு அஸ்திவாரமான சமுதாய மறுமலர்ச்சிப் பணியில் அல்லவா அவர் ஈடுபட்டிருக்க வேண்டும்?

அத்தகு செயல்களில் ஈடுபடுவதற்குக்கூட முடியாத சூழ்நிலையில் நேரு பண்டிதர் பிணைக்கப் பட்டிருக்கிறா என்றால், கடவுள்—புராணம், வேதம், வகுப்பு—ஜாதி என்றெல்லாம் பூச்சாண்டி காட்டி மனித குலத்திற்கே பெரும் தீங்கிழைத்து வரும் வர்க்கத்தினரை தட்டிக் கேட்டும், வகுப்பு வெறி பேசிடுவோரின் ஆணவத்தை வகுப்பு வாதத்தாலே அடக்கியும், திருத்தியும் வரும் அறிவியக்கத்தாருக்கு வெளிப்படையாக ஆதரவு தர முடியா விட்டாலும் நல்ல எண்ணத்தையாகிலும் நேரு பண்டிதர் தெரிவிக்கலா மல்லவா?

ஆனால் நேரு பண்டிதர்கள் செய்து வாருவது என்ன? மக்கள் சமுதாயத்தை ஜாதிய—வகுப்பு வெறித்தனம் கொண்டு பிளவு படுத்தி, நாட்டின் ஒற்றுமைக்கே கேடு பயப்பிவரும் ஜாதி வெறியர்கள் பழமை விரும்பிகள் ஆகியோரிடம் "நான் நோகாமல் அடிக்கிறேன் நீ ஓயாமல் அழு" என்ற வித்தைகளைக்காட்டுவதும்,

---

நக்கீரன்

அதே சமயத்தில் அறிவியக்கத்தினர் மீது சீறிவிழுவது மட்டுமல்லாமல் அடக்குமுறை ஆணவத்தின் துணையால் தொல்லை கொடுப்பதுமாகத்தானே நடந்து வருகின்றனர்!

நேருபண்டிதர் சினத்தையும்—ரஷ்யாவையும் வலம் வந்து இங்கே கூரை மீது ஏறி நின்று பழமை வெறியர்கள் மீது ஆவேசப் பேச்சுகளை மட்டும் வீசி எறிந்து விட்டு உலக முற்போக்கு நாடுகளிடையே சபாஷ் பட்டம் பெற எண்ணுவது அறிவுடைமையாகாது. இந்த மேல் வெளிச்சமெல்லாம் நீடித்திருக்கவும் முடியாது.

எனவே ஜாதிய — வகுப்பு வெறித் தன்மையையும்—அதற்கு பாதுகாப்பாக யிருக்கும் பிற்போக்கு சக்தியினையும் ஒழித்துக் கட்ட வேண்டுமென்ற நல்ல எண்ணம் நேரு பண்டிதருக்கு இருக்குமானால் மனிதாபிமானத்தில் ஓரளவு தலை சிறந்து விளங்கும் தென்னாட்டு அறிவியக்கத்தாரிடம் கலந்துபேசி, சட்டத்தின் துணைகொண்டு ஆவன செய்ய முற்பட வேண்டும்.

இதற்கு வழிவகை செய்யாமல் ஜாதி வெறித் தன்மையை எத்தனை முறைதான் உரத்த குரலில் கண்டித்துப் பேசினாலும் அது வெறும் கண் துடைப்பு என்பது மட்டுமல்லாமல் அரசியல் துறையில் ஆவடி சோஷலிஸ அகவல் பாடி வருவது போல சமுதாயத் [illegible]வும் ஏமாற்றுப் பட[illegible]ரிக நாசுக்காகக் [illegible] நேரு பண்[illegible]டிதர் என்று அறிவுலகம் எள்ளி நகையாடத்தான் செய்யும்.

நேரு பண்டிதர், ஜாதீய வெறித் தன்மையைச் சாடும் போதெல்லாம்—ஆகா இதோ பாரீர் நேரு பண்டிதர் எங்கள் பாதையில் நடைபோடுகிறார் என்று அவசரசாமிகள் ஏதாகிலும் அற்ப ஆசை கொள்ளலாமே யன்றி—அரசியல் யூகம் படைத்தோர், நேரு பண்டிதரின் வெட்டிப் பேச்சுகளைக் கண்டு ஏமாற முடியாது.

ஆகவே— நேரு பண்டிதர் சமுதாய மறுமலர்ச்சித் துறையில்—, பேச்சையும் — குரலையும் சற்று குறைத்துக்கொண்டு — செயல் முறையில் கூடுமான அளவு ஆவன செய்வதுதான் விவேகமும், அவருக்கு அப்பிரச்னையில் நல்ல எண்ணமும் இருப்பதாக நாடு நம்ப முடியும்.

●

மீர்சாகிப்பேட்டையில் மாபெருங் கூட்டம்

23—10—55 ஞாயிறு மாலை 6-மணிக்கு
இராமராவ் தோட்டத்தில் நடைபெறும்.

●

சென்னை தி. மு கழக முன்னாள் மாவட்டச் செயலாளர்
தோழர். கே. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில்

ஈ. வெ. கி. சம்பத் - வி. முனுசாமி எம். சி.

ஆகியோர் மாநில புதுஅமைப்புக் குழு தீர்ப்பு குறித்து பேசுவர்.

—43-வது வட்டத் தி. மு. கழகம்

மயக்குகிறார் -- மருட்டுகிறார்!

கீழவைப்பாறு, மாறன்

O

காசுக்காகத் தன் கற்பை விலை கூறி விற்கும் காரிகை தன்னிடம் சிக்கிய ஆடவனை மயக்கி அவனிடமுள்ள பொருளையெல்லாம் அபகரிக்கும் சூதுத் திட்டத்துடன் அவனைத் தழுவி அன்பில்லா நெஞ்சத்தோடு அழகே! அன்பே! ஆருயிரே! கண்ணே! கருவிழியே! உம்மைத் தழுவிடிலோர் புது சுகம் காண்கின்றேன். உம்மைக் காணு விட்டால் என் நெஞ்சம் வேதனையால் நெளிகிறது. இனிமேல் உம்மைப் பிரிய மாட்டேன். அடியாள் எந்தன் உள்ளமும் உடலும் உமக்கே சொந்தம் எனப் போதை மொழியூட்டி விழிகளை உருட்டுவாள். அவள் உதட்டிலேயிருந்து மட்டும் அன்பு வார்த்தைகளைத் தெளிக்கிருள்.

உள்ளம் சூதுக்கிடங்கு என்று அறியாத அந்த ஆடவனும் தன்னை மறந்தவனாய், ஆகா பெண்ணே, பொன்னே, மாசுபடா மாதுளங்கனியே, மலர்ந்து மணம் வீசும் மல்லிகையே! சோலைக் குளிர்ச்சியே காற்றுப் போக இடமின்றி கட்டியணைத்துக் கொள். காதல் கற்கண்டே சிதளச்சுவையூட்டும் சிந்தைக்கினியவளே! என தெளிவு பெறுதமயக்கத்தில் உளறுவான். அவள் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வந்து அவள் விழி அசையுமுன் இட்ட வேலையின் எடுபிடியாகி அடிபணியும் அப்பாவியாகக் காலத்தால் மாற்றப்படுவான்.

அவனிடம் கறக்கும் வ... யிலும் கறந்து விட்... பொருளை ... போகிற காலத்தில் உதைத்துத் தள்ளுவாள்—இவனிடம் சல்லாபம் பேசி உல்லாச வாழ்வு நடாத்திய அந்த நஞ்சு நெஞ்சாள்! இவன் நாதியற்று வீதியிலே கிடக்கும்போது ஊரும் உலகமும் இவனை இழிந்த சொல்லால் உளுத்தன் எனக் கேலி செய்யும்.

இதைத்தான் உலகப் பெரும் பேராசிரியர் வள்ளுவர் உலகிற்கு வழங்கிய அறிவுக் கருவூலமாம் திருக்குறளிலே "அன்பின் விழையார் பொருள் விழையும் ஆய் தொடியார் இன்சொல் இழுக்குத் தரும்" என்று அழகாக ஆழ்ந்த பொருளோடு குறிப்பிடுகிருர் போலும்.

அந்த நிலையிலேதான்—வேல் விழிகாட்டி பால் மொழிகள் கொட்டி பணம் பறிக்கும் பண்பற்ற கூட்டத்தினரின் பாத்திரத்திலே இன்று திராவிடத்தை மயக்குமொழிகள் பேசி அடிமைப்படுத்தி வைத்திருக்கின்றனர் வடநாட்டார். அவ்வப்போது தென்னகம் வருகிற போதெல்லாம் தென்னுடு மிகச் சிறந்த பண்பாடு கொண்ட நாடு; அதற்கு ஈடு வேறேது? தென்னுட்டைக் கொண்டு தான் உலக நாடுகள் முழு இந்தியாவையும் மதிக்கிறது என்றெல்லாம் பேசி விட்டு—எனவே, பிரிவினை சக்திகளைச் சிதையுங்கள். நாட்டைத் துண்டாட நினைக்கின்றனர் சில சண்டாளர்கள். அவர்களைப் பகையுங்கள். நாம் ஒன்றுபட்டு வாழ வேண்டும். நாம் பிரிந்து வாழ்ந்தால் எதிரி நம்மை வென்றுவிடுவான்என்று கொஞ்சம்கோழைத்தனத்தையும் வெட்கமில்லாமல் வெளிப்படையாகக்காட்டிப் பேசுகிருர்கள்.

தென்னகத்தை எக்காலத்தும் பகைவர் யாரும் வென்றதில்லை என்ற வரலாற்று உண்மைகளை எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம். எனவே, இப்போதும் தொடைநடுங்க வேண்டியவர்கள் அவர்களே யன்றி நாமல்ல. வடநாட்டவர் எல்லா வகையாலும் நம்மை அடிமைப் படுத்தியிருக்கின்றனர். நம்முடைய வளமெல்லாம் சுரண்டிக் கொண்டு, பாலைவனமாம் வடநாட்டைவளப்படுத்திக் கொண்டு நம்மைப் பலவீனமாக்கி விட்டால் நாம் எதிர்க்க மாட்டோம். எதிர்க்கும் சக்தி நம்மவருக்கு வறண்டுபோகும் என்ற தவறுன எண்ணத்தோடு ஆட்சி செய்கிருர்கள்.

எரிகிற வீட்டிலும் பிடுங்கியது லாபம் என்ற கணக்குப்போட்டு, நாம் நமக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளை குமுறுகின்ற நெஞ்சோடு எடுத்துக் காட்டிக் கொண்டேயிருக்கின்ற நோத்திலும், நமக்கு நியாயமாக வழங்க வேண்டிய பங்கிலும் பிடுங்கிக் கொண்டு, பாலையை சோலையாக்கும் திட்டங்கள் வடநாட்டிலே உருவாக்கப்பட்டு வருகின்றன.

தென்னுடு புறக்கணிக்கப்பட்டு வருகின்றது என்ற உண்மையை எடுத்து விளக்கி மேடைதோறும் சொன்னுலும் ஏடுகள் வாயிலாக புள்ளி விவரங்கள் தந்தாலும் விலைமகளின் மயக்கத்தில் வீழ்ந்து விட்ட நிலைமையில் உள்ளவர்களாய் இருக்கும் ... கம்யூனிஸ்டு தோழர்களுக்கும் புரிவதே யில்லை—அல்லது வேண்டுமென்றே புரியவில்லை என நடிக்கிருர்கள்!

இந்த நாடு அண்மையிலே என்றைக்காவது ஒருநாள் பிரிந்து தான் போகும் என்ற உண்மை வடநாட்டுக்காரர்களுக்கு நன்கு புரிந்துவிட்டது. முன்பொரு முறை திராவிட இயக்கத்தின் சக்தியை மதிக்காமல் பேசினுர்—ஆசியாவின் ஜோதி, காந்தியாரின் வாரிசு, உத்திரப் பிரதேசத்துக் காரரான நேரு.

ஆத்திரமாகப் பேசுவதிலும், ஆகாத சொல் வீசுதிலும் தேர்ச்சி பெற்ற நேரு பண்டிதர், அண்ணல் காந்தி பிறந்த நாளாம் அக்டோபர் திங்கள் 2-ம் நாளன்று அவர் தம் இறவாப் புகழ் பாடி அஞ்சலி செய்த தினத்தன்று சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டை மேல்தளத்தின் மீது நின்றுகொண்டு வானத்தின் விளிம்பை முத்தமிட்டு நிற்கும் பரந்த கடலையும் கடல் மணற் பரப்பில் அமர்ந்திருந்த மக்களையும் பார்த்துப் பேசினுர்.

ஆவேசமாகப் பேசும் பண்பு கொண்டவர் சற்று நிதானமாக மயக்குமொழி பேசினுர். ஒலி பெருக்கி சரிவர வேலை செய்யாத காரணத்தால் கலைந்து செல்லும் மக்கள் கூட்டத்தையும் பார்த்துக் கொண்டேதான் பேசினுர். தன்னகத்தின் மாணவர் ஒழுக்க சீர்கேட்டையும் தென்னகத்தின் 'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் மேலாக ஓம்பப்படும்' குறள் வழிப் பண்பாட்டின் சிலத்தையும்பற்றி தன்னையறியாமலே உண்மையைப் பேசினுர்; தென்னகத்தைப் பாராட்டித் தன்னகத்தை இழித்துப் பேசினுர். தமிழர்கள் நல்லவர்கள் குணசாலிகள் நாகரீகமுள்ளவர்கள் என்ற உண்மைகளை தன் மகள் இந்திராவுக்கு எழுதியுள்ள கடிதங்களில் பேசியபடியே இப்போதும் பேசினுர்.

தமிழர் சமுதாயத்தின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டுவரும் திராவிட முன்னேற்றக் கழகம் நடாத்திய வலிவுள்ள போராட்டங்களின் தன்மையைப் புரிந்து கொண்ட நேரு அவர்கள் அப்படிப் பேசாமல் பின் எப்படிப் பேச முடியும்?

இந்தியை அரியாசனத்தில் அமர்த்தி நம் தாய்மொழித் தமிழின் வளர்ச்சியைப் பொசுக்கி விடுதலை உணர்ச்சியை நசுக்கி விடலாமென்று கருதிய வடவர்கள் இனித் தமிழரை ஏய்க்கமுடியாது என்பதை கண்டு கொண்டனர்.

விழிக்கு வரும் கேடு தடுக்க இமை துடிப்பதுபோல் மொழிக்கு வரும் கேடு துடைக்க திராவிடர் தம்படை கிளம்பிவிட்டது என்று தெரிந்து கொண்டார்கள். கனிச்சுளையின் மதுரத்தைவிட, கரும்புச் சாற்றின் தித்திப்பைவிட பனிமலர்த் தேனின் இனிமையை விட காய்ச்சிய பாகின் ருசியை விட நல்ல பசு ... சுவையைவிட தமிழர்தம் சொந்த மொழியை உயிரினும் இனிதாகப் போற்றுகின்றனர் என்பதைப் புரட்சிக் கவிஞர் கவிதை வடிவில் வடித்துத் தந்துள்ளதை அவர்களுக்கு நினைப்பூட்டுகிறபோது நம்மை அலட்சியப்படுத்தி விட முடியாது, தமிழர்களின் ஒப்பற்ற மொழியாம் தமிழ் சிறந்த மொழி முதன் மனிதனேடு பிறந்தமொழி, அழியாத இலக்கியப் பூங்கொத்துகளை வழங்கிய மொழி மூவேந்தர் முக்கொடி பறக்கவிட்டு முரசு கொட்டி வல்லரசு புரிந்த காலத்து முத்தான மொழி, கோழைகளின் இதயத்தையும் தடவி எழுச்சியூட்டும் சத்தான மொழி, தமிழர் சமுதாய விளைவுக்கு அமுதூற்றும் மொழி, இளமைக்குப் பால் வார்த்த இன்மொழி, புலவர்தம் கூர்வாளான மொழி—இத்தகு சிறப்புடைய மொழியை இறப்பினும் காப்போம். தமிழ்மொழிக்கு—அம்மொழி பேசும் இனத்திற்கு—அவ்வினம் வாழும் நாட்டிற்கு கேடு விளைவிக்கும் சூதுக்காரர்கள் எந்த உருவத்திலே வந்தாலும் களத்திலே சந்தித்து அவர் தம் விலாவெலும் பொடித்து வெற்றி பெறத் திரண்டு நிற்கிறது திராவிடர் அணி.

இதை உணர்ந்து கொண்ட அலகாபாத் பண்டிதர் அவர்கள் எப்படி மயக்குவது என்பதிலே கவனம் செலுத்தியவராய், தமிழும் தேசிய மொழிதான், ஆனுலும், இந்தியத் துணைக் கண்டத்து வாழ் பெரும்பாலான மக்கள் பேசும் மொழியான இந்தியை அரசாங்க மொழியாக்குவதிலே எந்தத் தவறுமில்லையென்கிறார், உலக நாடுகளின் தொடர்புக்கு ஆங்கில மொழி அவசியம் என்பதை அறிந்துள்ள நேரு அவர்கள், தமிழர்கள் தாங்கள் தாய்மொழிப் பற்றற்றுப் போய்விட வேண்டுமென்பதற்காகச் சொல்கிருர். ஆங்கிலமும் கற்றுக்கொள்ளுங்கள். அரசாங்க மொழியான இந்தியும் கற்றுக்கொள்ளுங்கள் என்கிருர். இந்தி மக்களின் அன்றாடப் பழக்க வழக்கங்களில் புகுந்து விட்டால் தமிழ்மொழி மறைந்து விடும் என்ற எண்ணத்திலே தான் அப்படிப் பேசுகிருர்.

தமிழும் தேசிய மொழி தான் என்றுகூறும் அவர்ஏனே(!) மணியார்டர் பாரங்களில் கார்டு கவர்களில் ரூபாய் அணுக்களில் இந்தி எழுத்துக்களைப் புகுத்துகிருர்? தேசிய மொழிகளை மதிப்பதாகுமா? இந்தச் செயல். துரோகம் செய்ய நினைக்கின்ருர். பெரும்பான்மையானேர் பேசும் மொழி என்பதால் இந்தியைப் புகுத்துகிறோம் என்று காரணம் காட்டப்படுமானுல் எங்கள் நலனைக் காப்பதில் அக்கரையுள்ள கருத்துள்ள எங்களைப் பிரிந்து போகும் நெருக்கடியான கட்டத்திற்கு நீங்களே தள்ளுகிறீர்கள் என்று தானே அய்யா பொருள்? இனியும் உங்களோடு உறவட முடியாது.

அறியாச் சிறுவன் அணிந்துள்ள ஆபரணங்களை அபகரிக்கத் திட்டமிடும் திருட்டுக் குணம் படைத்தவன் சிறுவனுக்கு மிட்டாய் கொடுத்து விளையாட்டுக் காட்டி விருப்பமாகப் பேசி மறைவிடம் அழைத்துச் சென்றுக் கொன்றுவிடும் கொடுமையைப்போல வடநாட்டவர்கள் நம்மை மயக்கி நம் உரிமையை கொன்றுவிட நினைக்கின்றனர்,

நாட்டைப் பிரிக்கத் திட்டமிடும் எந்தச் சக்தியையும் அரசாங்க அடக்கு முறைச் சக்திகள் அனைத்தையும் அவிழ்த்து விட்டு அழித்து விடுவேன் என்று மருட்டுகிருர், மற்றொரு பக்கம் வெள்ளையரின் கொடுங்கோலரசை எதிர்த்துப் போரிட்டு மாவீரர் மனிதருள் மாணிக்கம், என்று பாராட்டுப் பெற்றவர், உலக அரங்கில் உரிமைக் குரல் எழுப்புவோரின் குரல் வளையை நெரிக்கும் ஏகாதிபத்தியங்களை எதிர்த்து உபதேச மொழி சொல்பவர், கொக்கரிக்கிருர் கொடுமை செய்வேன், கடுமையான நடவடிக்கைகள் எடுப்பேன் என்று.

தமிழர்கள் மயக்கு மொழியில் மயங்கவும் மாட்டார்கள். மருட்டுதலுக்கு அஞ்சவும் மாட்டார்கள்.

புள்ளி மான்கள் துள்ளி விளையாடும் மந்தையிலே புலி புகுந்து விட்டால் ஏற்படும் விபரீத விளைவுகளை, அமுதத் தென்றல் வீசி இன்ப மணம் எழுப்பும் அழகுப் பூந்தோட்டத்தில் புயல் நுழைந்து விட்டால் ஏற்படும் வீண் சேதங்களை உணர்ந்திருக்கிற தமிழர்கள் வடவர் மயக்கு மொழியில் எப்படி மயங்குவார்கள்? வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள்கள் எங்கள் வெற்றித் தோள்கள் என்று வீர முழக்கமிட்டு கொடியோர் செயல் அறுக்க கொலைவாள் எடுத்து களம் புகும் குகை வாழ் புலியின் உயர் குணமேவிய கன்னித்தமிழர் பரம்பரை மருட்டுதலுக்கு எப்படி அஞ்சுவார்கள்?

பஞ்சாப் கட்டுரையின் இரண்டாங் கட்டம் இவ்வாரம் துவங்குகிறது.

தொடர்ந்தாற்போல் கடந்த ஒன்பது வாரங்களாக (அதாவது '**திராவிடன்**' ஒன்பதாம் ஆண்டு துவக்க முதற்கொண்டு) — '**புறப்படுவோம் பஞ்சாப்**' என்ற கட்டுரையிலிருந்து, '**பிரியா விடை**' என்ற கட்டுரை வரை உணர்ச்சியினளவானும் ஆர்வமிகுதியானும் பாசப்பிடியினானும் மிகவே உந்தப்பட்டு ஒன்பது வகைக் கட்டுரைகளைத் தந்து ஏகினேம் அன்பர்கள் அறிந்ததே.

இதுவரை எங் கட்டுரைகளுக்குப் பாராட்டுரை வழங்கினோர் பலர். குறை இருத்தோரும் உளர். அவ்விருபாலார்க்கும் எவ்வகை வேறுபாடின்றியே எமது கனிந்த நன்றி யறிதலைத் தெரிவித்துக் கொள்ளக் கடவேம்.

எம்மால் எவ்வகையானும் மறக்கவே முடியாத "**திராவிடன்**" பொன்னேட்டில் வெளியான பஞ்சாப் கட்டுரைகள் ஒருங்கே திருவாளர்: **எஸ். இராமனுதன்** அவர்களது கவனத்தை ஈர்த்தன எனக் கேட்டு எமது நெஞ்சம் உவகையால் பூத்துக் குலுங்குகிறது.

அவரை யாம் நேறிற் காண வாய்த்தபோது, அவர் எம்பால் மகிழ்ச்சி யுரைச் சொரிந்து, "ஓங்குக உமது எழுத்தார்வம்!—வெல்க உமது முயற்சி!—தழைக்க உமது எழுத்து!" என நெஞ்சார வாழ்த்தி னாக்கினர்.

"ஊக்கமுடைமை ஆக்கத்திற் கழகு" —என்ற ஔவைப் பாட்டியின் அமுத மொழியினை நினைக்கத் தூண்டிய திரு எஸ். இராமனுதன் அவர்களுக்கு எமது நெஞ்சத்தோடுறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ள கடப்பாடுடையேம்.

[illegible] கதைத் [illegible] கே. ஜி. இராதா [illegible] ஏன்? [illegible] பஞ்சாப் கட்டுரை" [illegible] எழுத முற்படக் [illegible] நடை, அவ் [illegible] நடை எல்லாம் [illegible] வருகின்ற [illegible] நடையில், [illegible] விரண்டிலு.

[illegible] சுனுர்த்தனம் "அப்படி [illegible] அமைய வேண்டுமென்று நினைந்து எழுத முற்பட்டால் இயற்கைக்கு மாறுபட்ட செயற்கை நடை போல் உருவெடுத்து கட்டுரையின் எழிலைக் குலைத்து விடும். எனவே, உங்களுக்கு இயற்கையா யமைந்த ஒரு நடையையே கடைப் பிடிக்க! அதுவே நாளடைவில் நலங் கொழிக்கும்" என விழைந்தார் அவர். அதுவே எமக்கும் சரியெனப்பட்டது.

இரண்டாங் குறையாக இராதாமணாளன், "இந்தியையும், ஆங்கிலத்தையும், தாராளமாக நுழைய விட்டு விட்டீர்களே!" அவை தவிர்த்துத் தமிழிலேயே எழுதிடக் கூடாதா!" என்றார்.

"தவிர்க்க முடியாத இடங்களில், நிகழ்ந்த நிகழ்ச்சிகளை உரைக்கும்போது, விறு விறுப்பும், சுவையையுங் கூட்ட, அவ்வாறு எழுதுவதை வாசகர்கள் விரைந்தே விரும்புவர். நானெ எழுத்தாளியல்லதான்! ஆனால் பத்திரிகைகளை விரும்பிப் படிப்போன்! படிப்போர் கண்கொண்டு பார்க்கும்போது, "திருவேடம்" பயன் படுத்திய இந்தியும், ஆங்கிலமும், இடத்திற்குப் பொருந்துமாறே அமைந்திருக்கின்றன. அதை நான் மிகவும் விரும்பியே படித்தேன். பிடித்தமாயும் இருந்தது. சுவையூட்டுவனவாயும் அமைந்தது."—என்று நண்பர் குழாயிருந்த ஓர் அன்பர் (பெயரைக் குறிப்பிட வேண்டாமென்று கேட்டுக் கொண்டார்) அபிப்பிராயப்பட்டனர்.

அப்படி அபிப்பிராயப்பட்ட அதே நண்பரது குறை : புகைக் குடித்தல் உரைகளைக் குறையாகக் கண்டித்து வெறுத்தார்!

அவரது வெறுப்பில் பொருளில்லாமல் இல்லை!

புதுவையிலிருந்து "தொழிலாள மித்திரன்" என்ற ஏடு வந்தது என்பது பலருக்கு நினைவு இருக்கலாம். அதில் இன்று 'நம் நாடு' பொறுப்பாசிரியராகவுள்ள காஞ்சி. கலியாணசுந்தரனார் ஆசிரியப் பணியாற்றினர். அது காலை அவ் ஏட்டின் துணை ஆசிரியராகப் பணியாற்றிய நண்பர் கொ. மா. இராசரத்தினம் அவர்கள், "திராவிடனில்", பஞ்சாப் கட்டுரை வரிசைகளைக் கண்ணுற்றாராம். முதலில் யாரோ எழுதுகிறார் என்று படித்தாராம்! "இனித்ததாம்!" மீண்டும் படித்தாராம்! மீண்டும் மீண்டும் படித்தாராம்! அப்படிப் படிக்கும்போது சிற்சில இடங்களில் எமது "சுபாவங்கள்" மிளிர்ந்தனவாம். பிறகு தான், கட்டுரையாளரின் பெயரைப் பார்த்தாராம். "திருவேடம்!"...சற்று நிதானிக்காராம்!......ஓ! நமது தி......! என்று நண்பர்களுக்கெல்லாம் சொன்னாராம். "திராவிடன்" அது முதல் தொடர்ந்து வாங்கலானாராம்.

பஞ்சாப் கட்டுரை :

இரண்டாங் கட்டம்!

★

கடந்த மாதம் எம்மைச் சந்தித்த அவர் இவ்வாறெல்லாம் கூறி மகிழ்ந்து, "தாங்களும எழுத இறங்கி விட்டீர்களோ!"—என்று பகடியாடி நட்பை ஒட்டிக் காட்டினர். 'எழுத்தைப்போல் இன்பமளிக்க வல்லது உலகில் வேறெதுவுமில்லை! இதில் இல்லக் கிழத்திகூட தோல்வியுறுவாள்! எனவே எழுதி பெறுக இன்பம்! [illegible] டும் அவ் வின்பம் உம் பால்!" என வாழ்த்தி விடை பெற்றார்.

முகநக நட்புறவாடும் இரண்டொரு தோழர்கள் (நெஞ்சத்து அகநக நட்பதைச் சிஞ்சிதத்துங் கொள்ளாதார்) எமது கட்டுரைகளில் சில பல சொற்களைப் பொறுக்கி எடுத்து—மறைமுகமாகவாம்!—அவைகளையே எமது செவிகளில் உறையுமாறு உரைத்து, "மகிழ்ச்சிப் பசி"யைத் தீர்த்துக் கொள்ளலானார்கள்!

எப்படியும் "எல்லோரும் இன்புற்றிருப்பதுவே யல்லாது வேறொன்றும் வேண்டேன் பராபரமே"—என்றபடி அவர்களும் மகிழ, யாம் காரணமாய் அமைந்தோமே என்கிற வகையில் அவர்களுக்கும் எமது நன்றி! அது கிடக்க.

"திராவிடனில்" கடிதங்கள் வாயிலாகப் பாராட்டுரை வழங்கிய, வழங்கும் அன்பர்களுக்கு, எமது கைம்மாறாக உளங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது நிழலன்ன நண்பர் ஒருவர்' "தாங்கள் என்றென்றும் "திராவிடனை" மறக்கவேகூடாது! உயிர் உள்ளளவும் அதை போற்றியே தீரவேண்டு" மென்று அடிக்கடி கூறிக்கொண்டே இருப்பார்!

அதற்கு யாம், பெற்ற தாயை ஒருகால் மறப்பினும், 'திராவிடனை" மறத்தல் கூடுமோ! என உள்ளளவும் நினைந்துருகிப் பதில் கூறுவேன். உண்மையில் "திராவிடனை'ப் போல் இதுவரை எம்மை நம்பினதும், கை கொடுத்ததும் வேறேதுமில! என்ற எமது உள்ளத்தை அந் நண்பர்க்குத் திறந்து காட்டுதலுண்டாம்!

இனி யாம் கண்ட **சந்த் ராம்** அவர்களை நீங்களும் காண வாருங்கள் என அன்போடு அழைக்கின்றேம் !

நான் கண்ட

சந்த்ராம்

நான் கண்ட சந்த்ராம், திராவிடத் தந்தை **பெரியார் ஈ. வெ. ராமசாமி** கண்டு குலவிந்து மகிழ்ந்த சந்த்ராம் [illegible]

[illegible] விட்டால் [illegible] மாட்டீர் [illegible] இதோ : The revered Periyar E. V Ramasami and Mr. Annadurai were kind enough to visit me at my residence in Krishen Nagar, Lahore... (சந்த் ராம் கடிதம் — 17-11-'51)— பெரியார் ராமசாமியும், அறிஞர். அண்ணாதுரையும் லாகூரில் கிரிஷன் நகரிலுள்ள எனது இல்லத்திற்கு அருளுடன் வருகை தந்து என்னைச் சந்தித்தார்கள்.

பஞ்சாப் பெரியார்

இச்சம்பவம்—இந்தியா பாகிஸ்தானெனவும் இந்துஸ்தான் எனவும துண்டாடாது இருந்த போது நிகழ்ந்தது. பெரியார் இந்தியா பிராயணத்தின்போது அண்ணா உடன் சென்றார் என்பது நாமறிந்ததே! அதையும் சந்த் ராமே, I know Mr. Annadurai. He accompanied him (Periyar) in his Punjab tour (சந்த்ராம் கடிதம் : 23-8-'49) — "அறிஞர். அண்ணாதுரையை எனக்குத் தெரியும். அவர் பெரியார் மேற்கொண்ட பஞ்சாப் சுற்றுப் பிரயாணத்தின்போது உடன் வந்தார்"—என்று எனக்கு வரைந்த கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

சந்த்ராமை, பெரியாரும், அண்ணாவும், மட்டுமா கண்டார்கள்!

சந்த்ராம், காந்தியைச் சந்தித்து இருக்கிறார். ஜின்னாவுடன் பேசியிருக்கிறார். லாலா லஜபதிராயுக்கும் அவருக்கும் பகை. பாயி பரமானந்தா அவருக்குப் பழக்கம், டாக்டர். அம்பேத்கார் அவரது கூட்டுத் தோழர்.

ராமேஸ்வரி நேரு அம்மையார் அவரது ஜாதி ஒழிப்புக் கழகத்தின் [illegible]யாய் பணியாற்றி இருக்கிறார். மேலே கூறிய பாயி பரமானந்தா தான் அக்கழகத்தின் முதல் தலைவர்.

அத்தனை அரிய பெரிய தலைவர்களுக்கும் அறிமுகமான நமது சந்த்ராம், எண்ணத்தில், செயலில் பெரியார் ராமசாமி! [illegible] கனிவுப் பேச்சில் தமிழ்த் தென்றல் திரு. வி. க! இந்தி மொழிப் புல[illegible]யில் ஒரு மறைமலை! நடையிலும் பாவணியிலும் ஒரு [illegible] [illegible]ந்தி! தோற்றத்தில் ஒரு சி. பி! மொத்தத்தில் மிக நல்லவர்.

அப்படிப்பட்ட சந்த்ராம் தமிழ் நாட்டில் பிறந்திருப்பாரேயானால் பெரியார்—திரு. வி. க.—டாக்டர் வரதராஜுலு நாயுடு—என்ற மூவரோடு நின்று விடாமல், பெரியார்—திரு. வி. க—டாக்டர் வரதராஜுலு — சந்த்ராம் என்பதாக அமைந்திருக்கும்.

தென்னாட்டுப் பெரியார் ஈ. வே. ரா வென்றால் பஞ்சாப் பெரியார் சந்த்ராம் என்று துணிந்து கூறலாம்.

பெரியாருக்குச் சுயமரியாதைக் கழக மென்றால் சந்த்ராமுக்கு ஜாட்-பாட்—தோடக்—மண்டல் என்ற சாதி ஒழிப்புக் கழகம் !

அச் சாதி ஒழிப்புக் கழகத்தால் அரிய பெரிய சாதனைகளைச் சாதித்திருக்கிறார்:

பெரியாருக்கு 'குடி-அரசு' 'பகுத்தறிவு' என்ற சுடர் ஏடுகள் என்றால், சந்த்ராமிற்கு 'கிராந்தி' 'யுகாந்திர்' என்ற ஏடுகள் எண்ணற்றச் சாதனைகளைச் சாதித்துத் தந்தன!

கலப்புத் திருமணத்தையும், புரோகிதன் ஒழித்தத் திருமணத்தையும் பெரியார் நம் நாட்டில் துவக்கி வைத்தபோது, பஞ்சாபில் சந்த்ராம் அதே பணியை ஏற்று வெற்றிவாகை சூடினர்.

சூத்திரப்பட்டம் ஒழிய; சாதிச் சனியனோடு இங்கே பெரியார் போரிட்டார், போரிடுகிறார், அங்கே சந்த்ராம் அதையே செய்தார், செய்கிறார்.

பெரியார் காங்கிரசிலிருந்து வெளியேறியது போலவே சந்த்ராம் ஆரிய சமாஜத்திலிருந்து வெளியேறினர்.

சந்த்ராம் காங்கிரஸில் சேரவே யில்லை. சேர்ந்திருப்பரேல் இன்று அவர்தான் இந்திய ஜனாதிபதியாக இருந்திருப்பார்!

காங்கிரசில் சேராமலேயே காந்தியாரிடம் நன்மதிப்பைப் பெற்றவர் சந்த்ராம்.

சந்த் ராம் அவர்களின் சாதனைகளை அடுத்த கட்டுரையிலிருந்து தொடர்ந்து காண்போம்.

மாநில புது அமைப்பு திட்டம்

தி. மு. கழகப் பொதுச் செயலாளரின் அறிக்கை

இந்தியத் துணைக் கண்டத்தின் மாநிலங்களைப் புதிய முறையில் திருத்தி அமைப்பதற்கான ஆலோசனையைக் கூறும்படி 1953-ம் ஆண்டில் இந்தியப் பேரரசினரால் நியமிக்கப்பட்ட பசில் அலிக் குழு இப்பொழுது தன் அறிக்கையை வெளியிட்டுள்ளது;

"புதிய மாநில அமைப்புகள் எப்படி இருக்க வேண்டும் என்று ஆங்காங்குள்ள மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்களோ, அத்தகைய ஆவல்களை முழுவதும் நிறைவேற்றாத முறையிலும், பற்பல இடங்களில் முரண்பட்ட வகையிலும் பசில் அலிக் குழு தன்னுடைய கருத்துக்களைச் சிபாரிசு செய்துள்ளது;

"இந்தியாவிலுள்ள எல்லாப் பிரிவினரையும் திருப்திப் படுத்துவதாக நினைத்துக் கொண்டு, எவரையும் திருப்திப்படுத்தாத நிலையை குழுவின் அறிக்கை உண்டாக்கியிருக்கிறது;

"அறிக்கை எதிர்பார்த்த பலனை பயக்காத காரணத்தால், இந்தியத் துணைக் கண்டத்தின் ஆங்காங்குள்ள தலைவர்கள் தம் மறுப்பு அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர்; ஆங்காங்கு மறியல்கள், வேலை நிறுத்தங்கள், கடையடைப்புகள் போன்ற கிளர்ச்சிகள் வலுப்பெற்று வருகின்றன; தத்தம் கோரிக்கையை வலியுறுத்த ஆங்காங்குள்ள ஆண்களும் பெண்களும், இளைஞரும் முதியோரும், மாணவரும் அரசியல் கட்சியினரும் போராட்டங்களுக்கான ஆயத்தங்களைச் செய்து வருகின்றனர்; தென்னகத்தில் கொந்தளிப்புகள் எழுவதற்---- அறிகுறிகள் தென்படத் துவங்கிவிட்டன;

"மாநிலங்கள் புதிய மு... அமைக்கப்பட வேண்டும் என்... ...முதனிபடைக் காரணம் என்... ...அமைப்பதற்கான அடிப்படையில், மாநி... ...ன என்பதைப் புரிந்து கொண்டால்... ...ப புது அமைப்புக் குழு எந்த வகையில் தவறு செய்துள்ளது என்பதைத் தெரிந்துக் கொள்ளலாம். வெள்ளையர் ஆட்சியின் கீழ் மாநிலங்கள் இயற்கையாகவும் செயற்கையாகவும், கண்டகண்டபடியெல்லாம் பிரிக்கப்பட்டுக் கிடந்ததால், இயற்கையான ஒருமைப் பாடுள்ள மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்படவேண்டும் என்று எல்லோராலும் உணரப்பட்டது; பல்லாண்டு காலமாக இந்த உணர்வே எல்லோருக்கும் எல்லா அரசியல் கட்சியினராலும் ஊட்டப்பட்டு வந்தது, இந்த உணர்வு ஆளவந்துள்ள கட்சியாகிய காங்கிரசுக் கட்சியால் மிகவும் அழுத்தந் திருத்தமாக ஊட்டப்பட்டு வந்தது என்பதை எவரும் மறுக்க இயலாது. மாநிலங்கள் புதிதாகத் திருத்தி அமைக்கப்படுவதற்கு, 'இப்பொழுது மாநிலங்கள் மொழிவழி அமைந்திருக்க வில்லை; அவை மொழிவழி அமைக்கப் படவேண்டும்' என்பதுதான் நெடுநாளாக உணரப்பட்டு வந்த காரணமே ஒழிய; பொருளாதார வசதியோ, நிர்வாக வசதியோ, இயற்கை அமைப்போ, நில அமைப்போ அல்ல; இப்பொழுது இந்தியத் துணைக் கண்டம் எங்கணும் கொந்தளிப்புகள் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம், பசில் அலிக் குழு. நீண்ட காலமாக உணரப்பட்டு வந்த மொழிவழி மாநிலப் பிரிவினைக்கு முக்கியத்துவமும், முதலிடமும் கொடுக்காமல், வேறு பல காரணங்களுக்கும் முக்கியத்துவமும் முதலிடமும் கொடுத்து, அந்த வகையில் மாநிலங்களைப் பிரிக்க முயன்றிருப்பது தான்;

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை மொழிவழி மாநிலப் பிரிவினைக்கு முதலிடம் கொடுப்பதும், திராவிடத்தின் முழு விடுதலையைக் குறிக்கோளாகக் கொள்ளுவதும் ஆகும்; இந்த அடிப்படையில் நின்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் பசில் அலிக் குழுவின் அறிக்கையை நோக்குகிறது—ஆய்ந்து பார்க்கிறது;

"பசில் அலிக் குழு சென்னை வந்திருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அக்குழுவிடம் வைக்கப்பட்ட கருத்துக்களில் முக்கியமான சிலவற்றை இங்கே நினைவு படுத்திக்கொள்வது இன்றியமையாததாகும்:—

"தற்போதைய அரசியல் அமைப்பு, பல நூற்றுண்டுகளாக மெல்ல மெல்ல, சில சமயங்களில் இயற்கையாகவும், வேறு சில சமயங்களில்செயற்கையாகவும் வளர்ந்ததின் விளைவு; அவை முழுவதும் இந்த நாட்டை அடிமைகொண்ட அந்நிய அரசுகளால் செய்யப்பட்டன; அவர்களின் செயல் நல்ல எண்ணத்துடனும் இருந்திருக்கலாம்—நச்சு எண்ணத்துடனும் இருந்திருக்கலாம்; ஆனால், இந்த மண்ணுக்கு உரியதல்ல என்பது மட்டும் திண்ணம்; ஓர் அந்நிய அரசு சாதாரண இயல்புப்படியே, யார் மண்ணுக்கு உரியவர்களோ அவர்களின் எண்ணங்களைத் திருப்திப்படுத்தும் வகையில் வழிவகைகள் காண முடியாது; எனவே, பலம் பொருந்திய—உறுதியான—திறமை மிக்க அரசாங்கத்தை நிறுவுவதே அவர்களின் ஒரே குறிக்கோளாய் விளங்கியிருக்கிறது;

"ஆகவேதான், பரந்த இந்தியத் துணைக் கண்டமானது, இன்றைய தினம், வலிந்து திணிக்கப்பட்ட பல நிர்வாகப் பகுதிகளின் தொகுப்பாகக் காட்சியளிக்கிறது; இந்த அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கு அவர்களுக்கு ஆயுதமாக இருந்தது அறிவல்ல—அதிகாரக் கோலாகும்; இந்தத் தவற்றை எடுத்துக் காட்டிய பெருமை நிச்சயமாகக் காந்தீயக் காங்கிரசையே சாரும்; வெறும் நிர்வாக மண்டலங்களுக்குப் பதிலாக, இயற்கையான — ஒருமைப்பாடுள்ள—தேசீயப் பிரிவுகளுள்ள அரசுகள் நிறுவப் படவேண்டும் என்ற மொழிவழிப் பிரிவினைக் கொள்கையை மக்கள் மன்... ...த்து திறமையுடனும், தெளிவாகவும் காங்கிர... ...ாதாடியது; யார் மொழிவழி பிரிவி... ...ளைகைக்காக வாதாடினார்களோ, அவர்கள் ஆளவந்தார்களாகிவிட்டனர்; ஆனால், மொழிவழிப் பிரிவினைக் கொள்கையைக் ...ங்கிரசுச் சர்க்காரே எதிர்க்கவும், கண்... ...கிரமான நிலை ஏற்பட... ஆன விசி... வெள்ளை... ஆளவந்தார், ... வைத்துக்கொண்டு, 'ஏக இந்தியா, ...யாவின ஒருமைப்பாடு,' என்பன போன்ற தங்களுக்கு 'செல்லமான' கொள்கைகளை வற்புறுத்துகின்றனர் ...'ஏக இந்தியா,' 'இந்தியாவின் ஒருமைப்பாடு' என்ற கொள்கைகளை எவ்வளவுதான் வற்புறுத்தினும், இந்தியத் துணைக் கண்டமானது பல்வேறு தேசீயப் பிரிவுகளை—ஒன்றிற்கொன்று முரண்பாடில்லாவிட்டாலும், ஒன்றுடன் ஒன்று ஒரே வளர்ப்பில் சேர்க்கப்பட விரும்பாத பல்வேறு தேசீயப் பிரிவுகளைக் கொண்டது என்பதை எவரும் புறக்கணித்துவிட முடியாது;

"மொழிவழிப் பிரிவினை என்பது பல்லாயிரக் கணக்கானவர்கள் தத்தமது தாயகத்தைப் பெறவும், தங்களது அறிவால் — ஆற்றலால் அதைச் சீராக்கி செம்மைப்படுத்தவும் விரும்பும் இதய எழுச்சியாகும்; சுருங்கச் சொல்லின், இதுதான் தேசீய உணர்வாகும்; மொழிப்பற்று, இந்த உணர்வின் வெளிப்படை அம்சமாகும்; வெறும் நிர்வாகப் பிரிவுகள் மூலம் தரப்படும் இடம் தங்களது தேசீய உணர்வுக்கு அடிக்கப்படும் சாவு மணி என்பதே அவர்களின் முக்கியத்துவமாகும்; இந்த வாதத்தை, ஒற்றுமை—கட்டுப்பாடு என்ற பெயரால் சுலபமாக ஒதுக்கித் தள்ளிவிட முடியாது,

"மொழிவழி பிரிவினைக் கோரிக்கை என்பது ஒரு குறிப்பிட்ட மொழியின் பாதுகாப்புக்காக மட்டுமல்ல—ஆனால், ஒரு பொதுவான தாய்மொழியின் மூலம் உறவுகொண்ட ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டம் தங்கள் இயற்கையான தேசீய அவாக்களை நிறைவேற்றிக்கொள்ள—ஒரே அரசியல் அமைப்பின் மூலம் சேர்ந்து வாழவேண்டும்—என்ற உண்மையை, இந்தக் குழு குறித்துக் கொள்ளவேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் வேண்டுகிறது.

"மொழிவழிப் பிரிவினை, தனது நீண்ட பயணத்தின் முதற்படி—என்று, திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது; இந்தச் சந்தர்ப்பத்தில், திராவிடம், தமிழ்—தெலுங்கு—கன்னடம்—மலையாளம் என்ற நான்கு மொழிவழிப் பிரிவுகளை உடையது; ஆகவே, இந்த நான்கு மொழிவழிப் பிரிவுகளை அமைப்பதுதான் உடனடித் தேவை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறது; இதைச் செய்யும் போது, எந்த ஒரு மொழிப் பிரிவும், மற்றொரு மொழிப் பிரிவின் நிலப்பரப்பை அபகரித்துக் கொள்ளாதவாறு அதிகாரத்திலுள்ளோர் முழுக் கவனம் செலுத்த வேண்டும்;

"விசால ஆந்திரம், சம்யுக்த கர்நாடகம், ஐக்கிய கேரளம், தமிழகம்—என்ற பெயரால் உலவும் கோரிக்கைகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் முழுமனதுடன் வரவேற்பதுடன், ஆதரவும் அளித்து வருகிறது;

"திராவிட முன்னேற்றக் கழகம், மொழிவழிப் பிரிவினை அமைப்பு அவசியம்—என்று கூறுவதுடன், 'இந்த நான்கு மொழிப் பகுதிகளிடையே வேறு எந்த மொழிப் பகுதிகளும் பாராட்ட முடியாத ஓர் உறவுமுறை இருந்து வருகிறது' என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறது; ஏனெனில், தமிழ்—தெலுங்கு—கன்னடம்—மலையாளம் ஆகியவை ஒரே குடும்பத்தைச் சார்ந்தவை, இந்த மொழிகள் பேசும் மக்களிடம் ஒரு உறவு முறை உள்ளது; இந்த உறவு ஆயிரங் காரணங்களால் உலர்ந்திருக்கலாம்; ஒற்றுமைக்கும்—தோழமைக்கும் அடிப்படையான உயிர்ச் சக்தியாக அந்த உறவு விளங்குகிறது......சுயநிர்ணய அடிப்படையில், இந்த நான்கு மொழிவழி அரசுகளின் கூட்டாட்சியே திராவிட நாடாகும்; இந்தக் கூட்டாட்சி சுதந்திரக் குடியரசு நாடாக விளங்கும்; ஆகவே, இந்த நாட்டு மக்கள், அரசியல்—பொருளாதார—கலாச்சாரத் துறைகளில் முழு வளர்ச்சிபெற வாய்ப்புப் பெறுவர்;

"ஒரு ந... ...ன்பமாகவும், வளமாகவும், முன்னேற்றமு... ...ருக்க ... தேவை; ... வரலாறு ... அந்த ... இருப... ...ராவிட நாடு சுதந்திர ஜனநாயகக் குடியரசாக விளங்குவதற்கு உரிமையுடையது—என்பது புலப்படும்.

இத்தகைய கருத்துக்களின் அடிப்படையில் நின்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம், இப்பொழுதும் தன்னுடைய கொள்கையை வற்புறுத்துகிறது.

பொதுவாக இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்த வரையில் — குறிப்பாகத் தென்னகத்தைப் பொறுத்த வரையில், மாநில அமைப்புக்கு மொழிவழி அமைப்பைத்தான் முக்கியமாகக் கருத வேண்டும்; பொருளாதார வசதி, நில அமைப்பு, வரலாற்றுத் தொடர்ச்சி, நிர்வாக வசதி போன்ற காரணங்கள் நாட்டின் அமைப்புக்குத்தான் பார்க்கப்பட வேண்டுமே ஒழிய, ஒரு நாட்டின் உள்ளடங்கிய மாநில அமைப்புகளுக்கு அத்தகைய காரணங்களல்ல முக்கியமாகக் கருதப்பட வேண்டியது; நமது நாட்டைப் பொறுத்தவரையில், மொழிதான் மாநில அமைப்புக்கு முக்கிய காரணமாக இருந்து வருகிறது என்பதை உணரவேண்டும்.

"பசில் குழுவின் அறிக்கைப்படி புதிய தமிழகத்தில் தமிழ் பேசும் பகுதிகள் முழுவதும் சேர்க்கப் பட்டதாகத் தெரியவில்லை. திரு-கொச்சி அரசிலுள்ள ஒன்பது தமிழ்த் தாலுகாக்களில் ஐந்தைத் தான் புதிய தமிழகத்தோடு சேர்க்கக் குழு சிபாரிசு செய்திருக்கிறது—அவை, அகத்தீசுவரம், தோவாளை கல்குளம், விளவங்கோடு, செங்கோட்டை ஆகும்; தேவிகுளம், பீருமேடு தாலுகாக்களிலும், நெய்யாற்றங்கறைத் தாலுகாவின் பெரும் பகுதியிலும், சித்தூர் தாலுகாவிலும் தமிழர்கள் பெரும்பான்மையராக இருந்தும். அங்கெல்லாம் நடைபெற்ற தேர்தல்கள் தமிழர்களையே தேர்ந்தெடுத்து, அவை தமிழ்ப் பகுதிகள்தாம் என்பதை விளக்கியிருந்தும், பசில் குழு, அவற்றைக் கேரளத்தோடு சேர்க்க முற்பட்டிருப்பது கண்டனத்துக்குரியதே யாகும்; கொள்ளேகாலம்—பெரும்பான்மையான கன்னடியர்களால் நிறைந்திருக்கிறது—என்று தாலுகா ரீதியில் கணக்கிட்டு, அதனைக் கன்னடத்தோடு சேர்க்க முற்படும் பசில் குழு, தேவிகுளம், பீருமேடு, நெய்யாற்றங்கரை, சித்தூர் ஆகிய தாலுகாக்களைத் தமிழகத்தோடு சேர்க்காமலிருப்பது என்ன முறையின்பாற்பட்டதோ தெரியவில்லை;

தமிழகத்தின் வடக்குப் பகுதியில் ஆந்திர மாநிலத்தில் சிக்கிக் கிடக்கும் தமிழ்ப் பகுதிகள்

8-ம் பக்கம்

திராவிடன்

சென்னை : 21—10—55 : வெள்ளி

முதல் கோணல்: முற்றும் கோணல்!

★

மாநில புது அமைப்புக் குழுவின் தீர்ப்பைக் குறித்து திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையை பிரிதோரிடத்தில் வெளியிட்டிருக்கிறோம். அதனைக் கூர்ந்து கவனிக்கும் அனைவரும் அக் குழுவினரின் தீர்ப்பிலுள்ள பெருங் குறைகளை—அநீதிகளை எளிதில் புரிந்துகொள்ளலாம்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் இந்தியத் துணைக் கண்டத்தை ஆட்சி செலுத்தி வந்த நாளிலும் சுதந்திரத்தைப் படிப்படியாக வழங்குவது என்ற பெயரால் இவ்வித குழுக்கள் (கமிஷன்கள்) நிறுவப்பட்டிருக்கின்றன. அந்தக் குழுக்கள் ஆண்டுக் கணக்கில் நாட்டைச் சுற்றி, லட்சக்கணக்கில் பணத்தைச் செலவிட்டு தீர்ப்பைக் கூறுவது வழக்கம். ஆனால் அந்த சமயங்களில் கூட ஏற்பட்டிராத அளவுக்கு பலத்த—ஒருமித்த எதிர்ப்பு, மாநில புது அமைப்புக் குழுவின் தீர்ப்பைக் குறித்து இந்தியத் துணைக் கண்டமெங்கும் ஏற்பட்டிருக்கிறது.

குழுவில் இடம் பெற்றுள்ள தோழர்கள் பசல் அசலி (தலைவர்) சர்தார் பணிக்கர், பண்டித குன்ஸ்ரு ஆகிய மூவரும் அறிவாற்றலில் மட்டமானவர்கள் என்றும் நாம் கூறுவதற்கில்லை. ஆனால் அக்குழுவினருக்கு நேரு சர்க்காரால் கொடுக்கப்பட்ட வேலையானது துவக்கத்திலேயே கோணலாக அமைந்திருந்த தென்பதை அரசியல் ஞூகம் படைத்தார் உணர்வர். ஆதலால்தான் இக்குழுவினரின் தீர்ப்பும் கோணலாக

ஆங்கிலேய ஆட்சி யத்துணைக் கண்டத்தை பட வேண்டுமென்று னர். பொதுமக்களின் தேசிய உணர்ச்சிக்கு சாரமும் புரிந்தனர். மாநில அமைப்புப்படி ... யத்தனர். மொழிவழிப்படி மாநிலங்கள் அமையாததற்குத் தடையாய் நிற்பது வெள்ளையர் ஆதிக்கம் என்றும் சுட்டிக் காட்டி வந்தனர்.

பரங்கியர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து பாரதமாதாவின் தவப்புதல்வர்களை ஆட்சி பீடத்தில் அமரச் செய்தால், மொழிவழி மாநில அமைப்பினை நடைமுறையில் கொண்டு வருவர் என்று மக்கள் நம்பினர்.

ஆனால் இன்று நடப்பதென்ன? வெள்ளையர்கள் ஆட்சியில் செய்து வந்த திருவிளையாடல்களை இன்னும் சற்று தைரியமாக வடநாட்டு ஆதிக்கம் புரிந்து நிற்கிறது. இதனைத்தான் மாநில புது அமைப்புக் குழுவின் தீர்ப்பும் படம் பிடித்துக் காட்டுகிறது.

இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பல்வேறு மொழிவழி மக்களும் தங்களின் மொழிவழி மாநிலங்கள் அமைய பசல் அலிக் குழு, வழி வகுக்குமென்று எதிர்பார்த்தனர், ஆனால் குழுவினரோ இந்திய துணைக்கண்டத்திலுள்ள பல்வேறு இன-மொழிவழிமக்களை அடக்கி ஆண்டு தங்களின் ஆதிக்கத்தை இன்னும் எப்படி நீடிக்கச் செய்யலாம் என்பதற்கான திட்டத்தைத் தங்கள் எஜமானர்களுக்குக் (இந்தியப் பேரரசுக்கு) காட்டியிருக்கின்றனர்! இக்குழுவினரின் தீர்ப்பிலிருந்து திட்ட வட்டமாகத் தெரியவருவதெல்லாம், இவர்களுக்கு இந்தியப் பேரரசு இட்ட கட்டளைக்கூட தங்களின் ஏகாதிபத்திய பிடிப்பை இன்னும் இறுகப்பிடிக்க என்னென்ன வழி வகைகள் இருக்கின்றன என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்பதே யாகும்.

எனவேதான் மாநில புது அமைப்புக் குழுவினர் சில பகுதிகளில் மொழி வழியைக் காட்டியும், மற்றும் சில பகுதிகளில் நிர்வாக முறையை முன்வைத்தும், பிற இடங்களில் பொருளாதார நிலையைக் கொண்டும் மாநிலங்களைப் பிரித்துள்ளனர். இவ்வித அலங்கோல நிலைக்கு அக்குழுவினர் கூறும் சமாதான மெல்லாம், இந்தியாவின் ஒற்றுமையை மனதில் கொண்டே நாங்கள் இவ்விதம் கூறு போட்டிருக்கிறோம் என்ற பூச்சாண்டிதான்!

குழுவில் இடம்பெற்றுள்ள மூவரும், இந்தியத் துணைக்கண்டத்தின் ஒற்றுமை நீடித்து நிலைபெறுவதற்கு நேர்மையான வழி எது என்பதைப் புரிந்துகொள்ள லாயக்கற்றவர்கள் என்று நாம் கூறமாட்டோம். ஆனால் "தலைக்கேற்ற தலைப்பாகையை அமைக்காமல், தலைப்பாகைக் கேற்றதுபோல தலையை சீவி விடலாம்" என்று யோசனை கூறிய பிருகிருதிகளின் போக்கில் செல்லவேண்டிய பரிதாப நிலைக்கு அவர்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்றே தெரிகிறது.

குழுவினரின் தீர்ப்போ அல்லது அக்குழுவினரின் சிருஷ்டி கர்த்தாக்களின் எண்ணமோ எவ்வாறிருந்த போதிலும் தி. மு. கழகத்தைப்பொறுத்தவரை இந்தியப் பேரரசுக்கு தனது எண்ணத்தை திட்டவட்டமாக எடுத்துக் காட்டி அறிவுறுத்த வேண்டிய கடமைப் பட்டிருக்கிறது.

குழுவினரின் தீர்ப்பின்படி பார்த்தால், குறிப்பாக மராட்டிய—பஞ்சாப் மாநில மக்களுக்கு பெருந் துரோகத்தையும் தென்னாட்டு மக்களிடையே வீண் குரோதத்தையும் குழப்பத்தையும் உண்டாக்கியிருக்கிறது.

ஐதராபாத் ராஜ்பத்தில் அடங்கியுள்ள பகுதிகளை மொழி வழிப்படி சம்பந்தப்பட்ட மாநிலங்களுடன் சேர்ப்பதற்குப் பதிலாக ஆந்திரத்திற்குச் சேரவேண்டிய தெலுங்கானா பிரதேசத்தை ஐதராபாத்தில் இருக்க விட்டு. ஏற்கனவே, சமரசக் குழுவினரால் முடிவுக்கு வரப்பட்டுள்ள பெல்லாரிப் பகுதியினை மீண்டும் ஆந்திராவில் இணைக்கப்பட்டுள்ளது.

அதுபோலவே, தமிழகத்துடன் சேர்க்கப்பட வேண்டிய பீர்மேடு—தேவி குளம்—நெய்யாற்றங்கரைத் தாலுக்காக்களை கேரளத்துடனேயே ஒட்டவைத்து தமிழர்—மலையாளிகள் என்ற வேறுபாட்டினைத் தூபம் போட்டு வளர்க்கச் செய்திருக்கிறது. கொள்ளேகாளம் தாலுக்காவை தமிழகத்திலிருந்து பிரித்து கன்னடத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. இத்துடன் ஒவ்வொரு மாநிலத்திலும் உத்யோகங்களில் பிறமாநிலத்தவர் ஐம்பது சதவீதமும், நீதிபதிகளில் மூன்றில் ஒரு பங்கு பிற மாநிலத்தவர்கள் இருத்தல் வேண்டு மென்றும், தென்னகத்தில் மத்திய பல்கலைக் கழகம் ஒன்று நிறுவ வேண்டுமென்ற அநீதிகளும் குழுவின் அறிக்கையில் காணக்கிடக்கின்றன.

ஆக, இந்தியாவின் மக்கள் எண்ணிக்கையில் சரிபகுதிகொண்ட மக்களுக்கு மாநில புது அமைப்புக் குழு தெரிந்தோ—தெரியாமலோ பெருந் துரோகத்தை விளைவித்திருக்கிறது. இக்குறைபாட்டினை மனிதாபிமானத்துடன் தீர்த்து வைக்க இந்தியப் பேரரசு முயற்சிக்குமா அல்லது அடக்குமுறை பலத்தை நம்பி வெந்த புண்ணில் வேல்கொண்டு குத்துவதைப்போல விவேகமற்ற செயலில் இறங்குமா என்பதையே நாடு எதிர்பார்த்திருக்கிறது. அதற்கேற்ப தி. மு. கழகமும் தனது கொள்கையினை நிறைவேற்ற ஆவன செய்யும்.

நிற்க, இந்தியப் பேரரசின் பிடியில் மாநிலங்கள் சிக்கி யிருப்பதாலேயே இவ்வித கேடுகள் விளைவிக்கப்படுகின்றன என்பதை ...யாகிலும் பிற மாநில மக்கள் உணர்ந்து, அதன் பிடியிலிருந்து ... மீனைய வேண்டுவது இன்றியமையாத தாகுமென் ...நம்புகிறோம்.

நடக்க இருப்பவை

சிந்தாதிரிப்பேட்டை

கலைக் கதிர் கழக சார்பில் 21-10-55 வெள்ளி மாலை 6-மணிக்கு குருவப்ப செட்டி வீதியில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் அ. பொ. அரசு, எம். சி. தலைமையில் தோழர். சி. பி. சிற்றரசு, அறிஞர் அண்ணா அவர்களின் படத்தைக் திறந்து வைத்தும், கவிஞர் சுரதா, திரு. வி. க. அவர்களின் படத்தைத் திறந்து வைத்தும் பேசுவர்.

ஆம்பூர்

தி. மு கழக சார்பில் 21—10—55 வெள்ளி மாலை 6-மணிக்கு முகமதலி திடலில் பொதுக்கூட்டம் நடைபெறும் தோழர்கள். என். வி. நடராசன். முகவை. ஆர். எஸ். பாண்டியன், சொற்பொழிவாற்றுவர்.

பூவிருந்தவல்லி

தி. மு. கழக சார்பில் 22-10-55 சனி மாலை 6—மணிக்கு சன்னதித் தெருவில் பொதுக்கூட்டம் நடைபெறும். டி. சண்முகம், எம்.எல்.ஏ, தலைமையில் தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், கே. டி. எஸ். மணி டி. கே. போரூரான் சொற்பொழிவாற்றுவர். மாலை 4-மணிக்கு டி. ராசரத்தினம் தலைமையில் கண்டன ஊர்வலமும் ஒன்று புறப்படும்.

மீர்சாகிப்பேட்டை

தி. மு. கழக சார்பில் 23—10—55 ஞாயிறு மாலை 6—மணிக்கு ராமராவ் தோட்டத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர். கே. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் தோழர்கள். ஈ. வி. கே. சம்பத் வி. முனுசாமி எம். சி. பேசுவர்.

நீலகிரி—ராப்ராய்

...க அலுவலகத் திறப்பு தி. மு. க... காலை 11—விழா 23-10-55 ஞாயி... மணிக்கு ராப்ராய் அறவேணியல... நடைபெறும் தோழர் என். வி. நடராசன் அவர்கள் அலுவலகத்தைத் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றுவார்.

கோத்தகிரி

23—10—55 ஞாயிறு பிற்பகல் 2-மணிக்கு கோத்தகிரி திடலில் தி. மு. கழக பொதுக் கூட்டம் தோழர். கருணாநாதன் தலைமையில் நடைபெறும். துணைப்பொதுச் செயலாளர் என். வி. நடராசன் பேசுவார்.

பெங்களூர்

முத்தமிழ நாடக மன்றத்தின் 5-வது ஆண்டு விழா மாகடி ரோட் 7-வது கிராஸ் இரணய்யா அரங்கில் 23-10-55 ஞாயிறு மாலை 6-மணிக்கு தோழர் வெங்கடரமணா தலைமையில் நடைபெறும். தோழர்கள், ப. செல்வராசன், வே. இளஞ்சேரன் பேசுவர், இரவு 7-மணிக்கு 'திருமணம்' என்ற நாடகமும் நடைபெறும்.

கீழ்ப்பாக்கம்

சென்னை 22-வது வட்ட தி. மு. கழகத்தின் 4-ம் ஆண்டு துவக்க விழா 24-10-55 திங்கள் மாலை 6-மணிக்கு கீழ்ப்பாக்கம் டெய்லர்ஸ் ரோடு அருகிலுள்ள திடலில் நடைபெறும்; தோழர். ஏ. கே. சாமி அவர்கள் தலைமையில் தோழர் என். வி. நடராசன், கவிஞர் கண்ணதாசன் பேசுவர்.

ஆலடிப்பட்டி

அறிவு வளர் படிப்பக சார்பில் 27—10—55 மாலை 6-மணிக்கு நடைபெற இருக்கும் பொதுக்கூட்டத்தில் தோழர். சி. பி. சிற்றரசு பேசுவார்.

10

(காட்சி 23-ன் தொடர்ச்சி)

மூர்த்தி : ராஜத்தின் இதயத்திலும் கொடும் புலி குடியிருக்கிறதா?

பொன்னுரங்கம் ; சீதையும், நளாயினியும் பிறந்த நாடு இது. கல்லா நிலைவு வச்சுக்க...திரௌபதி வாழ்ந்த நாடு தம்பி—திரௌபதி வாழ்ந்த நாடு! இதில் ராஜம் மாதிரி பெரிய இடத்துப் போர்வையைப் போர்த்திக்கிட்டு 'அவமானம்' நடமாடுது. நீதியும் நியாயமும் இந்த உலகத்துக்கு எங்கே தம்பி புரியுது? அந்தக் காலத்தைப் பாரு! தேவர்கள் மனிதர்களாகப் பிறந்து நடமாடிய அவதாரக் காலத்திலே...ராவணனிடமிருந்து மீண்ட சீதை—ராமனிடம் எப்படி நடந்து கொண்டாள்! பொய்யும், புளுகையுமா சொல்லி வாழ்க்கை நடத்தினு? 'நாதா! மனம் கெடவில்லை' யென்று கச்சிதமாக ஒளிக்காமல், மறைக்காமல் உண்மையைச் சொன்னுள்! இந்தக் காலப் பெண்களுக்கு அவ்வளவு 'நளினம்' எங்கே தெரியப் போகுது?

மூ : பொன்னுரங்கம்! பழைய கதை எதுக்கு—என் நெஞ்சம் திக்காடாகிறது!

பொ : கேளு தம்பி — கேளு! பழைய கதையிலேதான் 'ஞானரச' மிருக்கு—இந்த அஞ்ஞான உலகுக்கு அதை எடுத்துத்தான் சொல்லனும். தர்ம பத்தினி அகலிகையின் கதைதான் உனக்குத் தெரியுமே! முனிவரிடம் நடந்ததை மறைத்தா கூறினுள். 'நீங்களென்று நினைத்து — அவரோடு கலந்தேன்' என்றுதானே உண்மையை வெளிச்ச மாக்கி வைத்தாள். அப்படியிருந்த காரணத்தால்தான் அவர்கள் 'பத்தினிரத்தின'ங்களாக முடிந்தது. இந்தக் காலத்திலேஏதாவது தப்பு நடந்த பெண்ணைக் கேட்டுப் பாரு தம்பி—உண்மையை ஒத்துக்காது! பழியையும், பாவத்தையும் யார் யாரு மேலேயோ தூக்கிப் போடும். ஏன் ராஜத்தையே எடுத்துக்க—நடந்த உண்மைகளை ஒப்புக் கொள்ளாது!

மூ : எல்லாம் வேஷம்!

பொ : வேஷந்தான் தம்பி முதல்லே நம்மகண்ணை மயக்குது! ......அந்தப் பெரிய இடத்து விவகாரம் நமக்கெதுக்கு தம்பி! விட்டு — சாக்கடைகளைப் பத்தி நாம பேசுவானேன்! அதுகளெல்லாம் சீர்திருந்தனும், தலை தூக்கனும்னுதான் நான் பாரதம் படிக்கப் போகிறேன் — பாரதம்...... தம்பி! என்னங்க தம்பி—சொல்லாமக் கூட ப்புறப் பட்டுட்டீங்களே........!

மூர்த்தி (நடந்து கொண்டே) ஆமா பொன்னுரங்கம்! 'மன வலி' அதிகம்–நான் வருகிறேன்!

(மூர்த்தி போய் விடுகிறுன்—பார்வையிலிருந்து மறைந்ததும் பலவேசமும், வீரனும் சிரித்துக் கொண்டே கோயிலின் பின்புறத்திலிருந்து வருகின்றனர். பொன்னுரங்கமும் சிரித்துக் கொண்டே வரவேற்கிறுன்)

பொன் : வாங்க தம்பிகளா—இப்ப திருப்திதானே!

பல : ஆமாம் பொன்னுரங்கம்! தீ பிடித்து விட்டது...இனி அது அணையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பொன் : மூர்த்தியை நினைத்தா பரிதாபமா யிருக்கு தம்பி. படத்தைப் பார்த்ததும் துடிதுடித்து விட்டான். ராஜத்தைப் பற்றி நான் பேசப்பேச அவன் முகமே இருண்டு விட்டது.

வீரன் : ஆசைக் கோட்டை இடியும்போது, ஆனந்தம் எங்கே யிருக்குப்?

பல : ...
நோ...
...

வீ : புகை விடும் இதயத்தில்—புயலைக் கிளப்பு!

ப : சரி வருகிறேன்...பொன்னுரங்கம்!

(கரத்தை நீட்டுகிறுன் பலவேசம். படத்தைத் தருகிறுன் பொன்னுரங்கம், படத்தை சட்டைப் பையிலே மறைத்து வைத்துக்கொண்டே வேகமாக நடைபோடுகிறுன் பலவேசம்.)

காட்சி 24·

இடம்—சாவடி அருகில்!

நிலைமை (சோர்ந்த உள்ளத்தோடு ஆகாயத்தில் உலவிய மேகக் கூட்டங்களைப் பார்த்துக் கொண்டே நடந்துகொண்டிருக்கிறுன் மூர்த்தி...எதிர்ப்படுகிறுன் பலவேசம். பலவேசத்தைப் பார்த்ததும்...வேறு பக்கமாக முகத்தைத் திருப்ப முயலுகிறுன் மூர்த்தி. பலவேசமோ விடவில்லை. மூர்த்தியின் கரங்களைப் பிடித்துக் கொண்டே......)

ப : என்ன மூர்த்தி — பார்த்தும் பாராதது போல நடிக்கிருயே!

மூ : பலவேசம், உடம்புக்கு ஒரு மாதிரி அதுதான்......!

[பிடித்திருக்கும் பலவேசத்தின் கரத்திலிருந்து தன் கரத்தை விடுவித்துக் கொள்ளுகிறுன் மூர்த்தி; அப்போது பலவேசத்தின்விரலிலுள்ள மோதிரம் மூர்த்தியின் கவனத்தைக் கவருகிறது. அதையே உற்றுப் பார்க்கிறுன்.]

ப : மூர்த்தி! வேலை தேடி சென்னைக்குப் போனுயே........என்ன ஆயிற்று ?

[இல்லையென்று சொல்லும்—பாவனையிலே கையை மட்டும் அசைத்துக் காட்டுகிறுன்]

ப : என்ன மூர்த்தி ? மோதிரத்தில் பதித்த பார்வையைத் திருப்பாமலிருக்கிருயே......சாதாரண மோதிரந்தான் — ஆனுல் இது விலைமதிக்க முடியாதது !

மூ : சாதாரண மோதிரத்துக்கு அவ்வளவு பெரிய புகழ்க் காவியமா ?

ப : மூர்த்தி — உனக்குப் புரியாது! உயிரை விட மேலான பொருள் உலகிலே எனக்கு இதுதான். அன்பு முத்திரை இந்த மோகன மோதிரம். இதைப்பார்த்தாலே—நெஞ்சிலே இன்பக்கனவுகள் நிழலாடுகின்றன.

சொந்த விஷயத்தை ... ...
....நான் வருகிறேன் !

[மோதிரத்தை வாயில் வைத்துக் கடித்துக் கொண்டே...... குறுநகையை மோத விட்டுப் பலவேசம் மறைந்து விடுகிறுன்.]

(தனிமையில் மூர்த்தி) சொந்த விஷயம்! அந்தச் சொந்த விஷயம் தானடா என்னை சோகப்பதுமையாக்கி விட்டது. ராஜம்!...... இவ்வளவு கேடு கெட்டவளா நீ! ஆமாம்!......அதே மோதிரம்..... ராஜத்தின் விரல்களை அணைத்துக்கிடந்த பச்சை மோதிரம்...... இப்போது கயவன் பலவேசத்தின் கரத்திலே! அவள் சூதுக்காரிதான்! போதைப் பேச்சிலே என்னை மயக்கப் பார்த்த சொல் அலங்காரி! தீக்காட்டைப் பூக்காடென்று நினைத்தேன். உலகம் ஏமாற்றுக் காரர்களின் கொலைக் கோயில் — பழிகாரர்களின் பலீ பீடம்......ராஜம்......ராஜம் !

காட்சி 25

இடம்—ஆற்றேரம்.

நிலைமை [ஆற்று மணலிலே நிலையில்லாமல் உலவிக்கொண்டிருந்த மூர்த்தி-ஆற்றேரத்துக் கல்லிலே அமருகிறுன். ஆற்று நீரிலே அவன் உருவம் மங்கித் தெரிகிறது, அதையே உற்றுப் பார்த்துக் கொண்டே......]

மூ : மோசக் குகையில் தள்ளப்பட்டேன் நான்! பாசத்தைக் கொட்டிப் பேசிய ராஜம்—மாற்றுனின் அணைப்பிலே! அழகும்—அலங்காரமும் மனச்சாட்சியைக் கொல்லத்தானு உதவின! ராஜம்! அன்பு பேசிய உன்னிடம் நல்ல பண்பு மிருக்கு மென்று நம்பி ஏமாந்தேன். அன்பு வலையிலே என்னைச்சிறை பிடித்து, அவமானக் கத்தியால் வெட்டுகிருயே! நீதான் உலகமென நம்பிக்கிடந்த எனக்கு ...உன் 'உன்பு நீதி'யின் லட்சணத்தை விளக்கி வைத்து விட்டாய்! மாணிக்கங்கள் கிடைத்து விடும் மலை மலையாக!...வைரமும், வைடூரியமும் வாங்கி விட முடியும் ஆனுல்......'மானம்' அதைத் தலையை விலை கொடுத்துக் கூட வாங்கி விட முடியாதே!

ராஜம்! அழகு மயிலென நம்பியிருந்த நீயா—வான்கோழியாகி விட்டாய்? 'காதல் கனி கசக்காது' என்று கூறினுயே...அது இப்போது என் நெஞ்சுக்கு நஞ்சாகி விட்டது. ஐய்யோ! நான் ஏமாற்றப் பட்...

...ல தெரியும் மூர்த்தி ...ழலுருவம் பேசுவது ...பிரமை தட்டுகிறது—உற்றுக் கேட்கிறுன்)

...நவம் : இல்லை! நீ ஏமாற ...ல்லை. ஆம். ராஜம் ஏமாற்றவே மாட்டாள், உனக்காகக் ...க்துக் கிடக்கும் பூங்கொடி அவள்—சாக்கடையிலே நெளியும் புழுவாக நினைக்காதே! சூழ்நிலை வீசும் வலையிலே நீயும் விழுந்து விடாதே! அந்த அழகுத் தாமரையின் அன்பு—வானவில் அல்ல! குப்பையிலேயிருக்கிறது மாணிக்கம். அதைக் கல்லென்று நினைத்து விட்டால்... தவறு உன்னுடையதுதான். அந்தத் தவறை முதலில் நீ திருத்திக் கொள்ளா விட்டால்...உண்மையின் கதவுகள் திறக்கவே திறக்காது!

மூ : கொஞ்சும் படத்தை —அவள் அவனுக்குத் தந்த அன்புப் பட்டயத்தை—சூழ்நிலையை யெல்லாம் அலசித்தானே பார்த்தேன்! கண்டதெல்லாம் கனவல்லவே!... ஊர்க் கோடியிலிருக்கும் பூசாரி பொன்னுரங்கத்துக்கு அவளின் ஊதாரித்தனம் பச்சையாகத் தெரிந்திருக்கிறது. நானொரு அவசரக்காரன். ஆத்திரத்தில் அவளை நெஞ்சில் புக அனுமதித்தேன். இப்போதுதான் உள்ளே புகுந்

8-ம் பக்கம் பார்க்க

ஏஜெண்டுகள் தேவை

தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், ஆகிய மொழிகளில் ரப்பர் ஸ்டாம்புகளை தயார் செய்கிறோம். ஆர்டர்களை வாங்கி அனுப்ப ஏஜெண்டுகள் தேவை உடனே விண்ணப்பிக்கவும்.

அருணு ரப்பர் ஸ்டாம்ப் ஒர்க்ஸ்
குடியேற்றம் : : (தென் இந்தியா)

கேள்வி? பதில்.

— அஞ்சாநெஞ்சன் —

●

எம். தங்கவேல், ராயபுரம்

கே: அய்யா அஞ்சா நெஞ்சனே நான் கேட்கும் கேள்விக்கு வருத்தப் படாமல் வெட்ட வெளிச்சமாக பதில் கூறுவீரா—இதோ என் கேள்வி—ராஜ்ய புனரமைப்புக் குழுவின் முடிவுப்படி உங்கள் திராவிட நாடு கோவிந்தா போட்டுக் கொண்டதாமே என்ன சொல்கிறீர்?

ப: அய்யா தங்கவேலரே, கேண்மின்—நீர், மாநில புது அமைப்புக் குழுவின் அறிக்கையை வைத்து திராவிட நாட்டுப் பிரச்னையை அலசிப் பார்ப்பதற்கு முன்னதாக திராவிட நாட்டுக் கூட்டாட்சி அல்லது பிரிவினை யென்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் தனது சட்ட திட்டத்தின் முதல்வரியில் கொடுத்துள்ள விளக்கத்தைக் கூர்ந்து கவனித்திருப்பின் இவ்வித கேள்வியை ஏதோ கெட்டிக்காரத்தனமாகக் கேட்[illegible] வி[illegible]ாக நீர் மனக்கோ[illegible]டை [illegible]யிருக்கமாட்[illegible]

திராவிட நாட்டுக் கூட்டாட்சி என்பது—தமிழகம். ஆந்திரம், கேரளம், கன்னடம் ஆகிய மாநிலங்கள் மொழிவழிப்படி தனித்தும் இனவழிப்படி சில முக்கிய பிரச்னைகளில் ஒன்றுபட்டு தோழமை உணர்ச்சி கொண்ட முறையில் இயங்குவதுமாகும்.

அதுமட்டுமல்லாமல், திராவிட நாட்டுக் கூட்டாட்சியில் சேர்ந்திருக்க விரும்பாத எந்த மாநிலமும் எந்த சமயத்தில் வேண்டுமானாலும் எல்லாப் பிரச்னைகளிலும் தனிஉரிமையுடன் வாழ தடையின்றி ஆவன செய்வதென்பதும் தி. மு. கழகக் கொள்கைப்படி அமைக்கப்படும் திராவிட நாட்டுக் கூட்டாட்சியின் சட்ட விதிகளில் முக்கிய இடம் பெறும். இதனை தி. மு. கழக சட்ட திட்டங்களின் துவக்கத்தில் விபரமாகக் காணலாம்.

" திராவிடம், கேரளம், ஆந்திரம், கன்னடம் ஆகியவைகள் ஒன்று சேர்ந்து இயங்கும் ஆட்சி முறைக்குத்தான் திராவிட நாடு என்று பெயர்" என தி. மு. கழகம் கூறியிருக்குமேயானால் நீர் கேட்ட கேள்வியில் அர்த்தமிருக்க முடியும். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் யூகத்துடன் திட்ட வட்டமாக தனது கொள்கையை எடுத்துக் காட்டி வலியுறுத்தி வந்திருக்கிறது.

மாநில புது அமைப்புக் குழுவின் அறிக்கையில் குறைபாடுகள்—அநீதிகள் பல இருப்பினும் தமிழகம், ஆந்திரம் கேரளம் கன்னடம், ஆகிய பகுதிகளுக்கு எல்லைக் கோடு இட்டுள்ளது. இந்நான்கு மொழிவழி மாநிலங்களும் வடநாட்டு ஆதிக்கத்தால் அரசியல், பொருளாதாரத் துறையில் ஏறத்தாழ ஒரே மாதிரியாக பாதிக்கப்பட்டும் வருகின்றன. எனவே இந்நான்கு மொழி மாநில மக்களும், தலைவர்களும், ஒன்று கூடி வடநாட்டு ஆதிக்கத்தின் கொடுமையை ஒழித்து பொதுவானதாயுள்ள இரண்டொரு பிரச்னைகளில் மட்டும் தோழமையுடன் கூட்டாட்சி நடத்த முயற்சிப்பதில் எந்த "கோவிந்தா" குறுக்கிடும் தோழரே, ஆரதீர யோசித்துப் பாரும். அப்படி ஏதாகிலும் கோவிந்தாக்கள் குறுக்கிட்டாலும் அதுகளின் தலையில் குட்டி அறிவு பெறச் செய்வதும் மிகக்கடினமான காரியமல்ல.

எனவே மாநில புது அமைப்புக் குழுவின் அறிக்கைப்படி பார்த்தாலும் திராவிட நாட்டுக் கூட்டாட்சி முறை அமையும் முயற்சிக்கு எவரும் 'கோவிந்தா' போட்டு விட முடியாது.

அவ்வித பித்தலாட்ட பிரச்சாரத்தில் ஈடு பட்டுள்ளதுகளின் மூளைக்குத்தான் கோவிந்தா மட்டுமல்ல அரோகரா போடப்பட்டிருக்கிறது என்பதைத் தாங்கள் அறிவீராக.

*

டி. நெடுமாறன், கோவை.

கே: கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளராயிருந்து பிறகு தி. மு. கழகத்தில் சேர்ந்து மறுபடியும் இப்போது நடைபெற்ற ஈரோடு முனிசிபாலிடி தேர்தலில் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து தேர்தல் போட்டியில் குதித்து, முன்பு இருந்த கவுன்சிலர் பதவியையும் பறி[illegible]த்து விழிக்கிறார் ஈரோட்டிலுள்ள ஒரு நடிகர். அவர் மறுபடியும் எந்தக் கட்சியில் சேருவார்?

ப: அய்யா நெடுமாறனாரே, உங்கள் கேள்வி என்ன இப்படி நீளுகிறதே, சரி பதில் கூறுகிறேன் கேளுங்கள். உப்புக் கண்டத்தை பறிகொடுத்த பாப்பாத்தியம்மாள் போல விழிக்கும் அந்த நடிகர் மீண்டும் கம்யூனிஸ்ட் ஆதரவாளராக மாறி நான் இதுவரை கட்சி விட்டு கட்சி மாறி வந்ததும் ஒரு அபார நடிப்பு என்று பேசி "நவீன நடிப்பில்" இறங்கலாம்.

மதுரை மாவட்டத்தில் அறிஞர் அண்ணா சுற்றுப்பயணம்

○

23—10—55

காலை—மதுரை சிறப்புக் கூட்டம்.

மாலை 6—மணிக்கு முத்தப் படிப்பக ஆண்டு விழா பொதுக்கூட்டம்.

இரவு 10—மணிக்கு நீரும் நெருப்பும் நாடகம்—தலைமை.

24—10—55

மாலை 5—மணிக்கு உசிலம்பட்டி பொதுக்கூட்டம்.

இரவு 8—மணிக்கு—தேவாரம்.

25—10—55

மாலை 4—மணிக்கு வண்டிப்பெரியார் பொதுக்கூட்டம்.

தம்பி

மூன்றுமாண்டு துவக்க இதழ்

●

பல புதிய சிறந்த பகுதிகளுடன் 25-10-55 அன்று எங்கும் கிடைக்கும்.

நிர்வாகி:

தம்பி அலுவலகம்

சிதம்பரம்.

சங்கீத பூஷணம் மணிசேகரன்

14-10-55 அன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின்போது 'கலை அரங்கம்' ஆசிரியர் கோவி. மணிசேகரன் அவர்களுக்கு சங்கீத பூஷணம் என்ற பட்டம் வழங்கப்பட்டது.

வித்வான்கள் மாநாட்டுப்பரிசை கவர்னர் பிரகாசா அவர்களிடமிருந்தும் பெற்றிருக்கிறார்.

திராவிடன் வாசகர்களுக்கு

அடுத்த வாரம் திராவிடனில்

டில்லியிலிருந்து வெளிவரும் தாட் என்னும் ஆங்கில இதழில் 15—10—55 அன்று வெளியிட்டுள்ள திராவிடஸ்தான் இயக்கம் என்ற கட்டுரையின் மொழிபெயர்ப்பு திராவிடன் 28-10-55 இதழில் வெளிவரும். —ஆ-ர்

மாநில புது அமைப்புக் குழு — பொதுச்செயலாளர் அறிக்கை

தமிழகத்தோடு இணைக்கப்பட வேண்டும் என்பதை, பிரச்னையை அணுக இருக்கும் இந்திய அரசாங்கமானாலும் சரி—அல்லது, ஆந்திரா—சென்னை அரசாங்கங்களானாலும் சரி—அவை, தம் மனதில் இருத்திக்கொள்ள வேண்டும்.

"கருநாடகத்தை ஒட்டித் தொடர்ந்தாற்போல் உள்ள கன்னடம் பேசும் பகுதிகள் ஆந்திராவில் சேர்க்கப்பட்டிருந்தாலும், கேரளத்தில் சேர்க்கப்பட்டிருந்தாலும் அவை சம்யுக்த கருநாடகத்தோடு சேர்க்கப்பட வேண்டியதோடு, ஐதராபாத்தில் இருக்கும் கன்னடப் பகுதிகளும் கருநாடகத்தோடு சேர்க்கப்பட வேண்டும் என்பதே நியாயமாகும்; பசில் அலி குழு, இவைகளை முழுவதுமாகக் கவனிக்காதது பெருந் தவறாகும்;

"அதுபோலவே, ஐதராபாத்திலுள்ள தெலுங்குப் பகுதிகள் ஆந்திரத்தோடு சேர்க்கப்பட்டு, 'விசாலாந்திரம்' உடனடியாக உருவாக்கப்பட வேண்டும் என்பதும் நியாயமே; பசில் குழு அறிக்கையில் கண்டபடி, பிரிக்கப்படும் கன்னட மராட்டியப் பகுதிகள் நீங்கலாக எஞ்சிய தெலுங்குப் பகுதிகள் 'ஐதராபாத்' என்ற பெயரில் வைக்கப்பட்டு 1961-ம் ஆண்டு பொதுத் தேர்தலின் முடிவுக்கு விடப்படுவது முறையாகாது; ஐதராபாத்திலுள்ள அந்தந்த மொழிப் பகுதிகள் அந்தந்த மொழி மாநிலங்களோடு சேர்க்கப்பட வேண்டும் என்பது உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டும்;

"பிரெஞ்சு ஆட்சியிலிருந்த திட்டுக்களின் வருங்காலம் பற்றி ஏதும் தெரிவிக்காமலிருப்பது வருந்தத்தக்கது; புதுவை, காரைக்கால் பகுதிகள் தமிழகத்துடனும், மாகி பகுதி கேரளத்துடனும், ஏனும், ஆந்திரத்துடனும் சேர்ப்பதற்கான முயற்சிகள் படிப்படியாக எடுக்கப்பட வேண்டும் என்பதை, இதுபோது, ஆட்சியாளர் நினைவுபடுத்திக் கொள்வது நல்லது;

"சுயநல நோக்கத்திற்காகச் சில முதலாளிகளால் பரப்பப்பட்டிருக்கும் 'தட்சிணப் பிரதேசம்' என்ற அமைப்பை, கேரளப் பொது மக்களும், தமிழகப் பொது மக்களும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்ற காரணங்காட்டி, அதனை ஒப்புக் கொள்ளாமல் விட்டுவிட்ட பசில் குழுவின் செயல் வரவேற்கத் தக்கதாகும்;

புதிய மாநில அமைப்பில், தமிழ் பேசும் மக்கள் அடங்கிய பகுதியைச் சென்னை மாநிலம் என்று அழைப்பதை யாரும் விரும்பவில்லை—விரும்பமாட்டார்கள்; எனவே, அதனைத் தமிழகம் என்றோ, அல்லது தமிழ் நாடு என்றோ அழைக்க வேண்டும்; அந்தப் படிக்கு பசில் குழுவின் அறிக்கை திருத்தப்படவேண்டும்;

மாநிலத்தில் அரசாங்க அலுவல் பதவிகளில் பாதி அளவு வெளி மாநிலத்தாருக்கு ஒதுக்கி வைக்கப்படவேண்டும்—என்று அறிக்கை கூறுவதையும், உயர் நீதிமன்ற நீதிபதிப் பதவிகளில் மூன்றில் ஒரு பங்கு வெளி மாநிலத்தாருக்கு ஒதுக்கி வைக்கப்பட வேண்டும் என்று அறிக்கை கூறுவதையும், திராவிட முன்னேற்றக் கழகம் வன்மையாக மறுக்கிறது; மாநில அரசாங்கப் பதவிகளைப் பொறுத்து, முழுச் சலுகைகளும் அந்தந்த மாநிலத்தாருக்கே அளிக்கப்பட வேண்டும்; மத்திய அரசாங்க அலுவல்களைப் பொறுத்து, மாநிலங்களுக்குச் சம வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்; மாநிலங்கள், தம்மிடம் ஆட்கள் இல்லாத நிலையில், தேவையான நிபுணர்களை வெளி மாநிலங்களிலிருந்தோ—வெளி இடங்களிலிருந்தோ வேண்டுமானால் வரவழைத்துக் கொள்ளலாம்;

தென்னகத்தில், இந்திப் பல்கலைக் கழகம் ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்று பசில் குழு அறிக்கை கூறுவது அவசியமற்ற கூற்றாகும்; தென்னகத்திற்கு அது கொஞ்சமும் அவசியமற்ற ஒன்றாவதோடு, தென்னக மொழிகளின் வளர்ச்சியை அது பாதிக்கக் கூடியதாகவும் அமைந்துவிடும்; எனவே அப்படிப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்திற்குத் தென்னகத்தில் அவசியமில்லை என்று திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது; 'வடநாட்டில் தென்னக மொழி ஒன்றைப் பல்கலைக் கழகப் பாடத் திட்டத்தில் வைக்க வேண்டும்,' என்று பசில் குழு கூறுவது, வெறுங் கண் துடைப்பு வேலையாகும்; அதனால் திராவிடத்துக்கு ஒரு பலனும் இல்லை.

மொழிவழி மாநிலங்களை எல்லைக் கமிஷன்களின் உதவியோடு அமைக்க பசில் குழு சிபாரிசு செய்திருக்குமேயானால், இப்பொழுது இந்தியத் துணைக் கண்டத்தின் பல பகுதிகளிலும் ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பு நிலைகள் ஏற்பட வழி பிறந்திருக்காது;

தென்னகத்தில் மொழிவழி மாநில அமைப்புக்காக நியாயமான அடிப்படைக் கிளர்ச்சிக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய ஒத்துழைப்பையும், ஆதரவையும் நல்கி உருவான பலன் காண முயலும்;

மொழிவழி மாநில அமைப்பையும், சுதந்திர ஜனநாயகத் திராவிடக் கூட்டாட்சியின் தோற்றத்தையும், திராவிட முன்னேற்றக் கழகம், கோரிக்கை நிறைவேறும் வரையில் வலியுறுத்திவரும்."

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர்
திராவிட முன்னேற்றக் கழகம்

சேலம் மாவட்ட, தி. மு. க. கிளைக் கழகச் செயலாளர்களுக்கு:

அன்புடையீர்!

சேலம் மாவட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் நவம்பர் மாதம் 20, 21, 22, 23, ஆகிய நான்கு நாட்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்ய ஒத்துக் கொண்டுள்ளார்கள். கூட்டம் நட[illegible]த விரும்பும் தோழர்கள் மாவட்டக் கழகத்தி[illegible] துமாறு வேண்டுகிறேன்.

பி, இராமலிங்கம்,
துணைச் செயலாளர், சேலம் மாவட்ட தி. மு. க.

இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகப் பொதுக் குழு.

நவம்பர் திங்கள் 12, 13, தேதிகளில் கண்டியில் கூடுகிறது

பொதுக் குழு கூடுவதற்கான இடவசதியும் கூட்டத்திற்கு வரும் தோழர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகளனைத்தும் ஒழுங்கு செய்யப்பட்டு வருகிறது.

கண்டியில் 13—11—55 ஞாயிறு மாலை 4-மணிக்கு
மாபெருங் பொதுக் கூட்டமும் நடைபெறும்

பொதுக் குழு உறுப்பினர்கள் சொற்பொழி வாற்றுவார்கள்.

பொதுக் குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகை தரவேண்டுகிறோம்.

இரா. அதி, மணி
பொதுச் செயல்ாளர் இலங்கை தி. மு. கழகம்.

பம்பாய் நண்பர்கள் படிப்பகம்

பம்பாய்–காந்தாரியா சால் நண்பர்கள் படிப்பக உறுப்பினர் கூட்டம் 8–10–'55 சனி இரவு 9–45 மணியளவில் கூடியது.

வரவு-செலவு கணக்கு, அன்பளிப்பாக வரப்பெற்ற புத்தகங்கள், அன்பளிக்கப்பட்டு வருகின்ற செய்தித் தாட்கள், படிப்பகத்திலிருந்து வாங்கப்படுகின்ற செய்தித் தாட்கள் பற்றிய விவரங்கள் செயலாளரால் வாசித்துக் காட்டப் பட்டன.

படிப்பகத்திற்குத் தலைவர்: தோழர் டி. என். பால்ராஜ், செயலாளர்: த. மு. பொற்கோ, துணைச்செயலாளர்: தோழர் பெ. கிருட்டிணன்; பொருளாளர்: தோழர் ஆ. கமலநாதன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

[illegible] தொட[illegible]

தெரிகி[illegible] அன்பிருந்[illegible]ணத்திலே நல்ல பண்[illegible]ருந்தால் அந்த மூன்று நாட்களாக சோகப்பதுமை ஆக்கியிருப்பாளா என்னை! வருகிறேன்! வருகிறேன்! காத்திரு! என்று கடிதம் எழுதினாளே தவிர, அவள் வரவில்லையே. அவள் சூதுக்காரியே தான்! சொல்லால் கொல்லும் சொகுசுக் காரியேதான்!

நிழலுருவம்: உண்மையின் சிறகுகளை அறுத்தெறிந்து விட்டா காதல் வானிலே வானம்பாடியாகப் பறக்க நினைத்தாய்?

மூ: காதல் — அது என்னளவிலே மாய மாளிகையாகி விட்டது! அது வீசும் இரும்புச் சக்கரங்களிலே நான் பலியாக மாட்டேன். எழுத்தாளனின் அழகுச் சொல்தானா காதல்? காவியப் புலவர்களுக்கும், ஓவியக்கலைஞர்களுக்கும் நெஞ்சிலே தேனைத் தடவிய காதலே...நீ எனக்கு மட்டும் ஏன் தேளாக மாறினாய்? பூக்காடானாய் புலவர்களுக்கு—என்னையோ சாக்காட்டின் விளிம்பிலே நிறுத்தி வைக்கிறாய்! என் காதல் காவியம் தீப்பிடித்துக் கொண்டது. எங்கோ பயணம் துவக்கி இங்கே பாலைவனத்திலே நிற்கிறேன்! —அடுத்த வாரம்.

எமது வெற்றிவாகை சூடிய மூன்றாவது கடைசி வாரம்!

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் தலைமையில்

வேலூர் முள்ளிப்பாளையம் தியேட்டரில் 21-10-55 வெள்ளி முதல் தினசரி

இலட்சிய நடிகர் எஸ்.எஸ். ராஜேந்திரன் நாடக மன்றத்தார் நடிக்கும்

மணிமகுடம்

கலைஞர் மு. கருணாநிதியின் அரிய கருத்துப் படையல்

கட்டணம்:— 2—8—0, 1—8—0, 0—12—0, 0—6—0, தாய்மார்களுக்குத் தரை 0—4—0.

எமது அடுத்த மகத்தான நாடக விருந்து — புது வெள்ளம்!

தோழர். யு. என். தேபர் அவர்கள்
புது டெல்லி

அனைத்திந்திய காங்கிரஸ் தலைவரே வணக்கம். மாநில புது அமைப்புக் குழுவின் அறிக்கையை அனைவரும் தேச ஐக்யத்தை மனதில் கொண்டே ஆராயவேண்டும்என்றும் இல்லாவிடில் தேசமே சிதைவுறு மென்றும் 16-10-'55 அன்று லட்சுமணபுரியில் ஒரு கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

தாங்கள் குறிப்பிடும் அந்தத் தேச ஐக்கியம் எது? இந்தியப் பேரரசின் ஆதிக்கத்தை வலுப்பெறச் செய்வதற்குப் பெயர்தான் தேச ஐக்கியமா? அல்லது ஒவ்வொரு மாநிலமும் மொழி வழிப்படியும் கலாச்சார ஒற்றுமைப்படியும் தனி உரிமை பெற்று இயங்கி அதனின் தோழமை உணர்ச்சியுடன் தாங்கள் கருதும் தேச ஐக்கியம் உருவாகி உறுதி பெறுவது, விவேகமானதாயென்று கேட்கிறேன்.

தேச ஐக்கியம் என்ற கூப்பாட்டினை எழுப்பிக் கொண்டு பிற மாநில மக்களின் மொழி, கலாச்சார, அரசியல் பொருளாதார உரிமைகளைப் பறித்து குறிப்பிட்ட ஒரு பகுதியினர் எல்லாத்துறைகளிலும்தலை கனக்க வாழ்வதற்குப் பெயர்தான்தேச ஐக்கிய மென்று கூறுவது நேர்மையாகுமா அது நிலை பெறத்தான் முடியுமா யென்பதைத் தங்களைப் போன்றோர் சிந்திக்காமல் பேசுவது நீதிதானா?

தாங்கள் கருத்தும் தேச ஐக்கியம்உருப்படவேண்டுமானால் மொழிவழி — கலாச்சார அடிப்படையில் எல்லா மாநிலங்களும் உரிமையுடன் இயங்குவதற்கு வழிவகை எவ்வளவு விரைவில் செய்யப்படுகிறதோ அதற்கேற்ப அந்த ஐக்கியம் வளர்ச்சியடையும்.

அதற்கு வழிவகை செய்யாமல் தேச ஐக்கியம் என்று கூப்பாடு போடுவதால் தற்போதுள்ள ஐக்கியமும் சீர்குலையும் என்பதை உணருமாறு வேண்டுகிறேன்.

மாநில புனரமைப்புக் குழுவினரின் அறிக்கைக்கு இன்று தாங்கள் எண்ணியுள்ள 'தேசமெங்கும்' ஏற்பட்டுள்ள கடுமையான எதிர்ப்பிலிருந்தே நான் கூறும் உண்மை உங்களுக்குத் தெரியவரலாம்.

எனவே தேச ஐக்கியம் என்ற பூச்சாண்டி காட்டி, பிறரின் உரிமையை, அகப்பட்ட வரையில் சுருட்டும் வித்தையில் காலத்தை வீணாக்க வேண்டாம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

—கூத்தரசன்

●

தோழர். சி. சுப்ரமண்யம் அவர்கள்
நிதி அமைச்சர் சென்னை.

அன்புடையீர், நலம் வேண்டுகிறேன். இந்தியப் பிரதமர் நேரு பண்டிதருக்கு தென்னாடு வரும் போதுதான் உச்சி குளிர்கிறது என்றும் புத்தி கூட சற்று தெளிவு பெறுவதாகவும் அவர் வாயாலேயே கூறிச் சென்றார்!

ஆனால் தங்களுக்கோ கோவை செல்லும் போதெல்லாம் மூளைக் குழப்பம் உண்டாவதாகத் தெரிகிறது. இத்தனைக்கும் பொதுவாக கோவை நகரின் தட்ப வெட்ப நிலை உடல் நலனுக்கு மிகவும் ஏற்றதா யிருந்தும், தங்களுக்கு மட்டும் அங்கே செல்லும் போது மூளைச் சூடு ஏற்படுவதைப் பார்த்தால் உங்களுக்கு உடல் கோளாறு ஏதேனுமுண்டோ என ஐயுற வேண்டியிருக்கிறது.

அவ்வாறிருப்பின், மராமத்து இலாக்கா அமைச்சரான ராமநாதபுர ராசாவிடம் ஏதேனும் "ரிப்பேர்" செய்யச் சொல்லலாம்! தாங்கள் சென்ற வாரம் கோவை சிதம்பரம் பூங்காவில் பிரமாத "கர்ஜனை" செய்தீர்களாம்! அதுபோது திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும் வெளுத்து கட்டி விட்டீர்களாம்!

இது எப்படியோ தொலையட்டும். உங்களின் அரசியல் குரு ஆச்சாரியாராலேயே தி. மு. கழகக் கொள்கைகளை அசைக்க முடியவில்லையென்றால் தங்களின் உறுமல்களைப் பற்றி பொருட்படுத்த வேண்டிய அவசியமேயில்லை.

நான் தங்களுக்கு மடல் தீட்ட வந்ததற்கு காரணம் என்னவெனில், தாங்கள் சிதம்பரம் பழனியப்ப முதலியாரின் தேவார பாடசாலையின் 51-வது ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில்,

"தேவாரம் திருவாசகம் முதலிய மதப் பாடல்கள் மூட நம்பிக்கையை வளர்ப்பவை என்று திராவிட இயக்கத்தினர் சொல்லுகிறார்கள். ஆனால் இந்த பாடல்களைக் கேட்கும் போது மன அமைதி ஏற்படுகிறது. நாம் நம்மையே மறந்தவர்களாகி விடுகிறோம். அதனாலேயே இதை தினமும் பாராயணம் செய்ய வேண்டும்"

என்று குறிப்பிட்டிருக்கிறீர். ஆகவே உங்களுக்கு ஒரு யோசனை கூறும் முகத்தான் இம்மடல் தீட்டுகிறேன்.

ஆட்சிபீடத்திலமர்ந்துகொண்டு வீண்வம்பை விலைக்கு வாங்கும் உங்களைப் போன்ற "விசித்திரச் சித்தர்கள்" தேவாரத் திருவாசகங்களைக் காதாரக் கேட்டு அமைதிபெறுவது மட்டும் போதாது. அந்தப் பாராயண கோஷ்டிகளில் ஒருவராகயிருந்து ஆஸ்திகத் தூக்கி நிற்க வைக்கும் வேலையில் ஈடுபடுவது மிகவும் பொருத்தமாயிருக்கும்.

உங்களின் குருஜி கூட இப்போது அந்தத் திருப்பணியில் தானே ஈடுபட்டிருக்கிறார்! அவர் சக்ரவர்த்தி திருமகனாரின் காதைகளைச் செப்பி அதன் மூலம் "அமைதி" பெற்று வருவது போல, தாங்களும் தேவாரப் பஜனைக்கு ஜால்ரா தட்டிக்கொண்டு மன அமைதிபெற முனைவீராக! அதை விடுத்து, ஏதோ ஆட்சி பீடத்தில் அமருவதற்கு இடம் கிடைத்து விட்ட தென்ற காரணத்தால், மாற்றுக் கருத்துக் கொண்டவர்களைப் பற்றி கன்வாறு தூற்றித் திரிவது அறிவுடைமையாகாது என்பதை உணர வேண்டுகிறேன்.

—கூத்தரசன்

●

கோபியில் காங்கிரஸ் மூக்கறுபட்டது!

தேசிய முகாமினரின் படுபாதாளத் தோல்வி.

அண்மையில் கோவை மாவட்டம்—கோபி நகரில் நடைபெற்ற நகரசபைத் தேர்தலில் காங்கிரஸ் படு பாதாளத் தோல்வியடைந்தது.

வார்டு வாரியாக ஒவ்வொரு வார்டிலும் வெற்றி பெற்றவர்களை மட்டும் (வெ) என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் தேர்தலில் தோல்வி யடைந்ததாகக் கொள்க.

●

1-வது வார்டு

ராமசாமிக் கவுண்டர் (சுயேச்சை) ... வெ
நல்லியண்ண கவுண்டர் (காங்கிரஸ்)

2

பி. பி. முருகையன் (சு) ... வெ
கே. மாரப்ப கவுண்டர் (காங்)

3

கே. பி. காளியண்ண கவுண்டர் (சு) ... வெ
நல்லக் கவுண்டர் (காங்)

4

பழனிச்சாமி (பொது. சு.) ... வெ
பாட்டான் (ரிசர்வ். சு.) ... வெ
செங்கோடன் (காங்)
மாகாளி (ரிசர்வ் காங்)

5

பி. கே. முத்துவேலப்பகவுண்டர் (பொது. சு) ... வெ
லீலா சாமுவேல் (பெண் சு) ... வெ
நஞ்சப்ப கவுண்டர் (காங்)
நாகம்மாள் (பெண் காங்)
சென்னியப்ப கவுண்டர் (சு)
வேலப்பன் (சு)

6

பி. என். நஞ்சப்பன் (சு) ... வெ
டி. எ. பழனியப்பன் (காங்)

7

பி. எஸ். பழனியப்பன் (காங்) ... வெ
எஸ். எம். ஷரீப் (சு)

8

அருணாசலம் (சு) ... வெ
பழனிச்சாமி பண்டாரம் (காங்)
கரீம் (சு)
சீனிவாசன் (சு)

9

ரங்கசாமி (பொது) ... வெ
கண்ணம்மாள் (பெண்) ... வெ
சோமசுந்தரம் செட்டியார் (சு)
பேச்சியம்மாள் (சு)
ஆணிமுத்து செட்டியார் (சு)
குப்புலட்சுமி (சு)

இவ்வார்டில் வெற்றி பெற்ற இருவரும் பொது நலச் சங்க உறுப்பினர்கள்.

10

கந்தப்ப கவுண்டர் (காங்) ... வெ
பழனிச்சாமி (சு)

11

ஜி. கே. சண்முகம் (காங்) ... வெ
காளியப்ப கவுண்டர் (சு)

12

கே. ஜி. நடராஜ ஆசாரி (சு) ... வெ
நிங்குராஜு (காங்)

13

ஜி. எஸ். லக்ஷ்மணன் (காங்) ... வெ
ஜி. எஸ். ராமசாமி (சு)

14

கிருஷ்ணசாமி (சு) ... வெ
வெங்கிடு சுப்பையர் (காங்)
நாமகிரி அம்மாள் (சு)

15

ராமசாமி (சு) ... வெ
சென்னியப்பகவுண்டர் (காங்)

16

நல்லதம்பி நாடார் (பொது. சு) ... வெ
மாரியப்பன் (ரிசர்வ். சு) ... வெ
நடராஜன் (காங்)
நாகப்பன் (காங்)
மாகாளி (சு)

கட்சிகளின் நிலை

காங்கிரஸ்	— 4
சுயேச்சை	— 14
பொது நலச் சங்கம்	— 2
ஆக மொத்தம்	20

வென்று விட்டான்!

சிறு கதை • நெல்லை பி. காசி விசுவலிங்கம்

அலுவலகத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்தேன். காலை மெல்லாம் ஏதோ இயந்திரத்தைப்போல் உழைத்துழைத்து பெறுகின்ற ஊதியத்தை செலவழிக்கும் வாழ்வை வாழ்வாகக் கொண்டு வாழ்ந்து கொண்டிருந்தேன். இதயமற்ற பணச்சுழங் காலை கதிரவன் உதித்ததும் உதிக்காததுமாக விரிந்த தன் வாயைப் பிளக்க, மனித யந்திரங்கள் பலவிதச் சாதனங்களில் வேகமாகச் சென்று பணச்சுழல் சிந்தும் சில துளிகளைப் பொறுக்க ஓடவேண்டும்! கதிரவன் மேற்கே ஓடுகின்றான்! மறையப் போகின்றான்! மறைந்து கொண்டிருக்கின்றான். இருளைக் கப்பும் மற்றுமொரு பயங்கரமான சுழல்! பொறுக்கி வந்த சில பணத்துளிகள் மீண்டும் கையினின்று பறந்து போகின்றன. எங்கோ போகின்றன! எங்கேயோ குவிகின்றன! எங்கேயோ ஒட்டிக் கொள்ளுகின்றன. விலை விற்கும் ஆயிரமாயிரம் பேதங்கள் நிறைந்த சமுதாயத்தில் நானும் வேதனை இதயத்தைக் குத்திக் குடைய யந்திரமானேன். ஏனோ! எதற்காகவோ! பெற்று பாசத்தை ஊட்டி வளர்த்து விட்ட பெற்றோரின் திருப்திக்காக—உடலின் ஒரு அங்கமாக அமைந்து விட்ட வயிற்றின் பசிக்ககுறலுக்காக நான் திருப்பித் திருப்பி பார்த்து அதையே எழுதும் எழுத்தர் ஆம் எழுதும் யந்திரமானேன்.

இரும்பு எந்திரங்களுக்கு நடுவே தசையும், நரம்பும், ரத்தமும் உயிரும் படைத்த எந்திரமாக நான் மாறிவிட்டாலும்—ஏதோ சிறிது மனிதத்தன்மை என் இதயத்தை விட்டு விலக மறுத்து உறைந்து கிடந்தது. நாகரிகம் எனும் நச்சுக் கரங்களிலே கசக்கிப் பிழியப் பட்டு காய்ந்துபோன மனிதக் கூட்டங்களின் [illegible] அடையாளங்களுக்கு ஒருவ நடந்து வந்தேன்.

செவிகளை அடைக்கும் சத்தம்! அமைதியைக் குலைத்து நாசமாக்கும் யந்திரக் கதறல்...உணவற்றவனுக்கு உலகத்தை வெறுத்த துறவிபோல பாதையில் நடமாடும் புதுமைகளைப் பார்த்துக் கொண்டே நடந்தேன் எங்கள் வீட்டு வாசல், கண்களில் பட்டது...வீடு என்று சொல்வதற்கு பதிலாகப் புறக்கூடு எனச் சொல்லலாம். உணர்வின்றி தாமாக நடந்து வந்த என் கால்கள் வாசலைத் தீண்டின—

''ஏண்டா தடிப்பயல! உன்னை எத்தனை தடவை சொல்லியிருக்கேன்! அதை எங்க அப்பா, தாத்தா எல்லாம் பத்திரமா பாதுகாப்பா வச்சிருந்தது... அதைத் தொடகூடாதுன்னு...அறிவிருக்கா...ஏண்டா...சொல்லியிருக்கனு... இல்லையா'' பட்பட் என அடிகள் விழுந்தன. ''சாமி பொம்மைய ஒடிச்ச இல்ல இரு, சாமி கண்ணை குத்தும் பாரு... சொன்னுக் கேக்கிறதே கிடையாது. கையில என்னடா.''

என் தம்பி...அவனை நாங்கள் தம்பி என்றுதான் அழைப்பது வழக்கம். ஆறு வயது தாண்டி ஏழாவது வயது நடக்கிறது. குறும்புக்கார பையன்—நல்ல கூர்மையான அறிவுள்ளவன். சதா ஏதாவது செய்து கொண்டிருந்தால்தான் அவனால் இருக்க முடியும், என் தந்தையோ வாழ்வில் நொந்து நைந்து போனவர். துன்பமெனும் நெருட்டலைய வேல் பல அவர் இதயத்தைத் துளைத்து இருந்தது. அதனால் அவருக்கு எதற்கெடுத்தாலும் கோபம் சட்டென வந்துவிடும். என் தம்பி அடிபடாத நாளே கிடையாது. நானோ என் தாயாரோ இருந்தால் நிலைமையைச் சமாளித்து அவனை விடுவிப்போம். அன்று என் தாயார் எங்கேயோ வெளியே போயிருந்த நேரத்தில் என் தம்பி...ஒரு விநாயகர் பொம்மையை விளையாடி ஒடித்து விட்டான்.

அந்த அறையில் சிவன், விஷ்ணு, பிரம்மா, விநாயகர், முருகன் இப்படிப் பல கடவுள் பொம்மைகள் என்னைப் பசை வழிய இருக்கும். மேற்குறித்த நான்கும் இரண்டு தலைமுறைகளாக வீட்டில் இருக்கின்றன என என் தந்தை அடிக்கடி குறிப்பிடுவார். காலத்தால் மதிப்போ! கடவுளென்ற மதிப்போ—அதை என் தாயும் தந்தையும் கும்பிடாத நாளே கிடையாது. ஏதோ ஒரு தனி உயர்வு எனக்கு அந்த உயர்வு தெரியவுமில்லை — புரியவுமில்லை, என் தம்பி அதில் ஒன்றை உடைத்து விட்டான். ''உலகத்தின் அணுவெல்லாம்' அசைவெல்லாம் அவன்'' என தலையைக் கொட்டிக் கொட்டிக் கொண்டு தலையும் கையும் மரத்துப்போன என் தந்தைக்கு பிறந்த கோபம்தான் 'அந்த வசவும் அடியும்'; மெல்ல அவனை விடுவித்துக் கொண்டு மாடிக்கு அழைத்தேன்.

'டேய் சின்னப்பயல...சாமி பொம்மையை ஒடிச்சா...சாமி கண்ணை குத்திடும்டா!...கண்ணைக் குத்திப்பிடும்!'—கோபம் சற்று தணிந்த என் தந்தை அவனை குறும்பு செய்யாமல் தடுப்பதற்காக இதைச் சொல்லிவிட்டு, சொல்லி விட்டு நகர்ந்தார், என் அம்மாவும் வந்தார்கள். அவர் வாயையே கவனித்துக் கொண்டிருந்த என் தம்பி புறங்கையால் விழிகளைத் துடைத்துக் கொண்டு மாடிக்கு வந்துவிட்டான்,

தெரு விளக்குகள் பற்றிக்கொண்டன! ரிப்பன் கட்டிட காலங்காட்டி மணி எட்டென அறிவிக்க அலங்காரமாக அடித்து அமர்ந்தது, கால தேவன் ஓடினான்! நகரத்தின் நரகக் கூச்சல் கொஞ்சம் கொஞ்சமாக ஷயரோக நோயாளியின் தூக்கம் போல குறைந்து கொண்டிருந்தது. இடை இடையே பலவிதமான சத்தங்கள் பிறந்து சலனமற்றுப்போவது ஷயரோக நோயாளியின் இரவு திடீர் என்று லொக், லொக் என பயங்கரமாக இருமுவதுபோல இருந்தது.

நான் ஜேன் ஆஸ்டினுடைய 'பெருமையும் பொருமையும்' என்ற நாவலைப் படித்துக் கொண்டிருந்தேன், என் தம்பி என் அருகில் [illegible]கொண்டு ஏதோ மனம் குழம்பியவன்போல் மேலே உத்திரத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தான்.

'என் தூங்கலியா?'

'ம்......!'

'ஏண்டா...பயமா இருக்கா'—அவன் பல்லெல்லாம் தெரிய மெல்லச் சிரித்தான்—'ஏண்டா!'

'ஆமா அண்ணே...சாமி கண்ணைக் குத்தும்மா!'—எனக்குச் சிரிப்பு வந்தது—'போடா முட்டாள் சாமிக்கு வேற வேலையில்ல இலை...அப்பா உன்னை பயப்படுத்த சொன்னரு.'—

'நெசமா ராத்திரி வராதா!'

'வராது!'

'சும்மா சொல்ற...! அப்பா சொன்னுங்க!!'

'பேசாம படு...நான்தான் இங்க இருக்கன...'—தம்பி படுத்துக்கொண்டான்...

நேரம் நகர்ந்தது. தொடர்ந்து அடித்த பனிரெண்டு மணிகள் ஒலி என் உறக்கத்தைச் சற்று கலைத்தது. திடீரென்று ஏதோ சாமான்கள் சரிந்து விழும் சத்தம்—தொடர்ந்து யாரோ படியேறும் ஒலி விழித்துக் கொண்டேன். என் தம்பி அருகில் மெல்ல படுப்பது தெரிந்தது, ஒன்றும் புரியாமல் விளக்கைப் பொறுத்தினேன்.

என் தம்பி பயத்துடன் ''நீ முழிச்சுக்கிட்டா இருந்த''

'ஆமா!'

'அண்ண, அப்பாகிட்ட சொல்லாத நான் எல்லா சாமியையும் ஒடிச்சிட்டன் இனிமெ கண்ணை குத்த முடியாதில்ல?!'—எனக்கு அதன் துணிவைக் கண்டு வியப்பு—அறியாமையைக் கண்டு சிரிப்பு! அவன் உடல நடுங்கிக் கொண்டிருந்தது அவன் உடல்சூடாக இருந்தது. தட்டிக் கொடுத்து தூங்க வைத்தேன்.

பொழுது புலர்ந்ததை அறிவிக்க வானம்பாடியின் இசையோ! கோழியின் கூவலோ யன்றி ஆலையின் சங்கொலி.கூவியது தம்பி உறங்கிக்கொண்டிருந்தான். காலைக் கடன்களை முடித்துக் கொண்டு இருந்தேன், என் தந்தை எங்கோ வெளியில் போயிருந்தார். அம்மா சமையல் செய்த வண்ணமிருந்தார்கள். மணி எட்டடித்தது. அப்போதுதான் எனக்கு தம்பி நினைவு வந்தது.

'தம்பி...தம்பி...இன்னுமா தூங்கிற'—பதிலில்லை. 'தம்...பீ...,தம்...பீ'—பதிலில்லை. என்னையறியாமல் ஏதோ பயம்...வேகமாக மாடிக்குச் சென்றேன்—

தம்பி கவிழ்ந்து படுத்துக்கொண்டிருந்தான்—உடல்......தொட முடியவில்லை...அனலாகக் காய்ந்து கொண்டிருந்தது.

நான்கு நாட்கள்...சரியான காய்ச்சல் என் தந்தை தலையில் அடித்துக்கொண்டார்...ஒருவரும் கண் இமைக்ககூட இல்லை. எப்படி முடியும். நடுவே திடீர் திடீர் என உளறினான் ! ஐயோ சாமி... சாமி கண்ணை குத்த வருதே...நீ குத்திடுவாயா எப்படி குத்துவ உன்னைதான் நான் ஒடிச்சுட்டன'' அம்மாவும் அப்பாவும் உயிரற்ற நடைப்பிணங்களாக நடமாடினர். நான் மட்டுமென்ன! அவன் அன்பு முகம்...ஏதோ வேதனை...என்னால் அவன் மனப்புயலை புரிந்து கொள்ள முடிந்தது,

ஆம் அவன் மூளையில் விசித்திரமான உருபடைத்த பல தெய்வங்கள்—வேலும், வாளும், சூலமும் கொண்டு அவன் கண்களைக் குத்த வருகிறார்கள்—கொடிய பயங்கர சத்தம்...—ம்—குத்த வருகிறார்கள்! குத்தப் போகிறார்கள்!—சூன்யம் — கடவுள்—கண் — வேல்—வாள்—சூலம்—கண்—கடவுள் –சத்தம் இருள் – ஒலி—பயம்—மயக்கம்.

நாலு நாட்கள் — தொண்ணூற்றி ஆறு மணிகள்! என் தம்பி வாழ்வுப் போராட்டம் நடத்தினான். உலக வாழ்வின் அழிவுத் தன்மையை எதிர்த்து தவங்கிடக்கும் முனிவனல்ல அவன்! உலகில் வாழ்வுக்காகப் போராடிப் போராடி வளர்ந்த உயிரினங்களில் ஒரு துளி.

அறிவின் முன்னேற்றத்துக்கு எடுத்துக் காட்டாக நிற்கும் 'ஆரோமைசின்' மருந்துதான் அவனைக் காப்பாற்றியது. குணமடைந்து விட்டாலும்—அயர்வும் சோர்வும் அவன் முகத்தில் பிரதிபலித்தது. அன்று மாலை எல்லோரும் உட்கார்ந்து கொண்டிருந்தோம், ஓய்வற்ற கவனிப்பு தந்த அயர்வு—தம்பி பிழைத்துக் கொண்டதை எண்ணி விளைந்த மகிழ்வும் எங்கள் அகத்திலும் முகத்திலும் நிறைந்திருந்தது.

திடீரென தம்பியின் முகம் வெளுத்தது விழிகள் மெல்ல பிதுங்கின, அவன் நோக்கிய திக்கை நாங்கள் நோக்கினோம். எதிரே ஒரு விநாயகர் படம். என் தந்தை ஆவேசம் வந்தவர்போல் எழுந்தார். அடுத்த விநாடி விநாயகர் படம் கார்ப்பரேஷன் தொட்டியை நோக்கிப் பறந்தது.

தம்பி மெல்ல எச்சிலை விழுங்கிக் கொண்டான் 'அப்பா!'

'என்னடா கண்ணு!'

ஆமா சாமி நெசம்மா கண்ண குத்துமா!

என் ராஜா நான் சும்மா சொன்னண்டா, அது மண் பொம்மை—மண் பொம்மைக்கு உயிர் ஏதுடா! போட்டா உடஞ்சு போவும்—நீ போட்டவுடன ஒடஞ்சு போச்சுல்ல. அதுபோல...குயவன் செய்யற பொம்மடா கண்ணு. அது. மண் பொம்மை...அசல் களி மண்ணுடா.

நிசமா ஒண்ணுஞ் செய்யதே!

நீ வேணும்னு அம்மாவையாவது அண்ணனையாவது கேளேன்!

ஏம்மா!

ஆமாண்டா செல்வம்!

ஏண்ண! நிசமாவ!

நான் அண்ணிக்கே சொல்லல!—தம்பி சிறிது நேரம் அமைதியாக இருந்தான்.

அப்பா...!

ஏம்பா...என்ன வேணும்!

ஆமா...அது மண்பொம்மை ஒன்னுஞ் செய்யாது...அப்படின்னு சொன்னயில்ல...அப்படின்னு நீ அம்மா ...இரண்டு பேரும் 'அதத்தா இதத்தா காப்பாத்து அப்புடீன்னு கும்புடுறீங்க ...அதுதான் ஒண்ணுஞ் செய்யாத...'—என் விழிகளில் வியப்பும் மகிழ்வும் வட்டமிட்டது. என் தந்தை விழித்தார். என் தாய் கன்னத்தில் கை வைத்த வண்ணம் மெல்ல சிரித்தாள்

'ஏப்பா...அப்பா...சொல்லேன்,'

மண் பொம்மையை — பொம்மையை கும்பிடக் கூடாதுதான்!

யார் யாரோ செய்ய முடியாத காரியத்தை என் தம்பி சாதித்துவிட்டான்.

அறியாமையை வென்றுவிட்டான்!

Tel: WIND. Phone: 55373

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ்: 26, லாரி ஸ்டாண்ட் ஆலைகவுனி, மதருஸ்-1

பார்சல் ஆபீஸ்: 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதருஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி; கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8. கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
,, 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
,, கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருநகர்
,, வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

முதல் முகலாயப் பேரரசி — சரித்திரச் சித்திரம்

சுல்தானு ரசியா

கௌதமன்

7

7—10—55 தொடர்ச்சி

●

காலம் 1236

நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்றவுடன் முதலில் மன்னன் ருக்னுதீனின் முகம் கோபத்தால் சிவந்திருந்தாலும், பின்னர் அது சோகத்தால் பொலிவிழந்தே போய்விட்டது. மகத்தான செல்விப்பீடம் கிடைத்தும் நிலைக்கவில்லையே தனக்கு, என்று தேம்பித் தேம்பியழுதான் அந்த அப்பாவி! 'தாய் தாயென்று நம்பியிருந்தோம், அந்தப் பாவியோ, தனது கொடுமை எண்ணங்களால் நாட்டின் நடைமுறைகளையே முழுக்க முழுக்க அலக்கழித்து விட்டாள்! நல்லவர்களென்று நம்பி யிருந்த கொலுமண்டபக் காரர்களோ — தாங்கள் வீசிக்கொண்டிருந்த சாமரத்தை நிறுத்தி வைத்துவிட்டு வேதனையைத் தூவ முன் வந்து விட்டனர்! இனி எதிர்த்துப் பயனில்லை—உயிர்காத்துக் கொள்ளுவதுதான் சாலச் சிறந்தது! என்று மறுமொழி பேசவில்லை ருக்னுதீன்—ஆனால் இந்த நேரத்தில்தான் ஓம்ராக்களின் தலைவரும் படித்து முடித்தார் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை!

''மன்னரிடத்திலே திறமையை எதிர்பார்த்தோம்; ஆனால் ஏமாந்தோம்! இஸ்லாமியக் கலாச்சாரம் வளரும்—அவரின் ஆட்சிமுறையில், என்று பேரானந்தம் கொண்டோம்—ஆனால் அவரின் தாறுமாறு ஆட்சி நமக்குப் பேரிடியைத்தான் பரிசாகத் தந்தது! கொடுங்கோன்மையை செங்கோன்மையின்பிரதிநுபம் என்றெண்ணிய அவருக்கு நாட்டைப்பற்றிய அக்கரை யில்லாததில் ஆச்சரியமில்லை! ஆளத்தெரியாதவர்—ஆண்டும் தவறிழைப்பவர்—தவறிழைத்தாலும் தன்னைத் திருத்திக் கொள்ள முயலாதவர்—ஆணவத்தால் ஆள்பவர்—பிறர் சொல் கேட்டு ஆள்பவர்—ஆகிய இவர்கள் யாருமே இஸ்லாமிய அரியணைக்கு ஏற்றவரல்லர்! மன்னர் ருக்னுதீனே இந்தப் பட்டியலின் ஏகப் பிரதிநிதி இப்போது! எனவேதான் இம்மாமன்றம் அவர் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்துவிட்டது! இனியும் அவர் தொடர்ந்து ஆள்வதைநமது இஸ்லாமியப் பெருமக்கள்விரும்பவில்லை ஆகவே அவரை இந்தப் பிரகடனத்தின் மூலம் டெல்லி அரியணையைவிட்டு நீக்கியிருப்பதாக அறிவித்துக் கொள்ளுகிறது!

இங்ஙனம்தான் படித்து முடித்தார். அந்த மதத்தலைவர்—மறுகணம் பேரிடியைப் போன்ற ஆரவாரம் கிளம்பியது! மன்னன் ருக்னுதீனே தேம்பித் தேம்பியழுத வண்ணம் சிம்மாசனத்தினின்றும் எழுந்து நின்றான்! கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தங்கமுடியைக் கழற்றினான்! சிம்மாசனத்திலே அதை வைத்துவிட்டு மீண்டும் தன்கண்களைத் துடைத்துக் கொண்டான் — பிறகு வாளைக் கழற்றினான்; சிம்மாசனத்திலே அதையும் வைத்தான்! முத்திரை மோதிரத்தையும் கழற்றி அங்கே வைத்தான்! ஆனால் இந்த நேரத்திலேதான் அவனால் அந்தப் பெருந்துயரைத் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை!

அழுது கொண்டே கொலுமண்டபத்தை ஓர் முறைப் பார்த்தான்—வணங்கினான்! பிறகு ஒவ்வொரு படியாக இறங்கி வந்தான்! அவனிறங்கி வருவதைக் கண்ட மக்கள் பார்!—பார்! அந்தத் துருக்கிய சிங்காரி தந்த ஆணவச் செல்வம் எப்படி ஒவ்வொருபடியாக இறங்கி வருகிறது பார்!' என்று கேலி செய்தனர்! அந்த கேலியும் கூச்சலும் அவன் காதிலேயும் ஒலிக்கத்தான் செய்தது—என்றாலும் என்ன செய்ய முடியுமவனால்...! கோல் பிடித்த கரமா கொக்கரித்து ஜாடை காட்டி அவர்களை கூண்டோடு சிறையிலே தள்ளு என்று சொல்ல...! அல்லவே—கோல்விடுத்த கரமல்லவா அது—எனவேதான் கூப்பிப் பணிந்தது! பாவம்! தலைகுனிந்தவாறே அரண்மனை சென்றான் ருக்னுதீன்! டெல்லிப் பீடத்தை ஓர்நொடியில் மறந்து விட்டான் அந்த அப்பாவி சுல்தான்! மறக்கச் செய்து விட்டனர் அந்த மதத் தலைவர்கள்!

ஆம்! மதத்தலைவர்கள் — அவர்கள்தான் எதனையும் செய்ய வல்லவர்களாயிற்றே! எதனையும் செய்யவல்ல வல்லமையினைத் தேடிப் பெற்றவர்களாயிற்றே—அவர்களுக்கென்றேதான் இஸ்லாமிய அரசாங்கம் மட்டுமல்ல; மற்றெந்த அரசாங்கமும் நடந்தது அந்த நாளில் என்றால் அதில் என்னதவறிருக்க முடியும்! எனவேதான் மாற்றினர் திட்டத்தை! அதிலே சிரமமொன்றும் அவர்களுக்கிருக்கவில்லை, அதன் பலன் ருக்னுதீனின் மணிமுடி சிம்மாசனத்திலே இடறி வீழ்ந்தது. ஆனால் அதே நேரத்தில் அவனது மணிமுடி தரித்திருந்த தலையோ அந்தப் புரத்திலே அவன் தாயின் அணைப்பிலே விம்மி விம்மியழுது கொண்டிருந்தது! தேம்பி யழுத அந்த அப்பாவி இளைஞனைத் தேற்றிக் கொண்டிருந்தாள் அந்தபேராசைக்காரி!

இங்கோ கொலுமண்டபத்திலே, நாடாளும் பொறுப்பை ரஸியா மீது சுமத்தும் பணியிலே மும்முரமாக ஈடுபட்டிருந்தனர் கொலுமண்டபக்காரர்கள்!

ருக்னுதீன் நினைத்திருந்தால் தன் அதிகார பலத்தால் ஆளும்பீடத்தை உடும்புப் பிடியாகவும் பிடித்துக் கொண்டு சத்தியாக்கிரகம் செய்து கொண்டிருந்திருக்கலாம்; இல்லாவிட்டால் மக்களிடமாகிலும் மண்டியிட்டு அவர்களின் கருணைக்கு ஏங்கிக் கொண்டிருந்திருக்கலாம். ஆனால், அந்தச் செயலில் அவன் சிந்தை செல்லவில்லை என்பது மாத்திரமல்ல; சென்றிருந்தாலும் வெற்றி கிட்டுமா என்பதிலேயும் அவன் நம்பிக்கையற்றுக் கிடந்தான். ஏனெனில் அந்த அளவுக்கு அவன் அனைவரையும் பகைத்துக் கொண்டிருந்தான், அந்த நான்கைந்து மாதங்களில்! எனவே தான் எவர் கருணையும் அவனுக்குக் கிடைக்காமற் போயிற்று!

ஆனால் இளவரசி ரஸியாவுக்கோ அந்தக் கருணை இப்போது தேடி ஓடி வந்து மலர் மாலையிடக் காத்திருந்தது! ஓர் காலத்தில் விரட்டி யடித்த கருணை இப்போது அணைத்து மகிழக் கிளம்பி வந்தது! காலம் மட்டும் மாறும் என்பதல்ல இதன் பொருள், ஆள்வோரின் உள்ளத்திலேற்படும் ஒரு சிறு கோளாறும் மற்றவர்கள் வெகுவாக பாதிப்பதாயிருந்தால், மக்களில் நல்ல உள்ளம் படைத்தவர் அத்தகைய பயங்கர சூழ்நிலையை மேலும், மேலும், வளரவிட்டுக் கொள்ள மாட்டார்கள், அதற்கு ஏதாவது ஒரு பரிகாரம் தேடித்தான் தீருவார்கள்—எப்படியாவது அத்தகைய கொடுமைகளை—கோளாறுகளை ஒழித்துக் கட்டித்தான் தீருவார்கள் என்ற உயர் பொருளும் அதிலே தொக்கி நிற்கத்தான் செய்கிறது!

இங்கோ, இளவரசி ரஸியாவுக்குக் கொலுமண்டபம் கட்டியங் கூறக் காத்துக் கிடந்தது. விண்ணைப் பிளக்கும் வாழ்த்தொலிகளைக் கொலுமண்டபம் கிளப்பிக் கொண்டிருந்ததை வேதனையோடு சகித்துக் கொண்டாள் அந்தத் துருக்கிய சிங்காரி—ஆனால் ஆவலோடு உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தாள் ரஸியா! கணத்திற்குக் கணம் கொலுமண்டபத்திலேற்படும் மாறுதல்களை விரைந்தோடி அறிவித்துக் கொண்டிருந்தார்கள் அவளின் அபிமானிய அடிமைகள்!

ரஸியா மாடியின் மேல்தளத்திலேயிருந்து அரசாங்க நடிவடிக்கைகளையல்ல; மக்கள் வெள்ளத்தின் உணர்ச்சிப் பெருக்கை நேரிடையாகவே கவனித்துக் கொண்டிருந்தாள்! அந்த மகிழ்வுச் சூழ்நிலையில் தன் பின்னால் வந்து நின்ற ஆரவாரக் கூட்டத்தினையும் கவனிக்க மறந்துவிட்டாள் அந்தப் பெண்ணரசி! அவ்வளவு மகிழ்ச்சியவளுக்கு! வேதனை பெற்றவர் ஓர் புறம் பொறாமைத் தீயினால் வெந்து சாம்பலாகிக் கொண்டிருக்க. ரஸியாவுக்கோ நம்பிக்கை நக்ஷத்திரம் தெரிந்து கொண்டிருந்தது. அந்த நேர்த்தியினை ரசித்துக் கொண்டிருந்தாள் ரஸியா! ஆனால், இங்கோ பின்னால்:

'இளவரசி ரஸியா வாழ்க!' கிளம்பியது! திரும்பினாள் வேள் விழியாள்; திகைத்தாள்; ஆச்சர்யத்தால் மௌனச் சிலையானாள்! தேடியது நாடி வந்தது!

பூரண கும்பமெடுத்த பிரதானியரும், சாமரம் வீசிய பிரபுக்களும், நல்லாசி கூறிடும் தலைவர்களும், பணிந்து போற்றும் போர் வீரரும், மகிழ்ந்து வாழ்த்திடும் இஸ்லாமியப் பெருமக்களும், பின்னாலே நிற்கக் கண்டாள் ரஸியா! மாடியின் மேல் தளந்தான்—அது இருந்தாலும், ஆர்வம் அவர்களை அவ்வளவு உயரத்திற்கும் ஏறிவரச் செய்தது. இளவரசி ரஸியா முன்பொரு சமயம் அரச பீடத்திற்கு வெளியில் கொண்டு வந்து நிறுத்தச் செய்த பெரு முயற்சிக்கு, சமாதானம் கூறவோ என்னவோ அவளைத் தேடி ஓடோடியும் வந்தனர் அந்தக் கொலுமண்டபத்தார்! ஆர்வ மிகுந்த தொனியால் அந்த வஞ்சிக்கப்பட்ட பொற்கொடியாளை 'வா! வா!' வென்றழைத்தனர் அவர்கள்!

கரம் கூப்பி யருகில் வந்தாள் அந்த வஞ்சிக் கொடியாள்! மந்திரியார் கொடுத்த மலர் மாலையைத் தாதி சூட்டினாள் ரசியாவுக்கு! விண்ணதிரக் கிளம்பியது வாழ்த்தொலி! மாளிகையிலே எழுகிற அந்தப் பேரொலி விண்ணை மட்டுமல்ல; எதிரிலே உயர்ந்தோங்கி நின்ற குதப்மினாரையும் துளைத்துச் சென்றது. தந்தையின் நினைவுச் சின்னம் கேட்க வேண்டுமே அந்தப் பேரொலியை, அதால் தான் என்னவோ உரக்கக்கிளம்பியது அந்த ஒலி! மகிழ்வு பொங்கியது எங்கும்!

இளவரசி ரஸியாவோ பேச வாயெடுத்தாள்! ஆனால் அவளின் முத்துப் பற்களும், முல்லைச் சிரிப்பும், துடிதுடிக்கும் செவ்விதழுந்தான் வெளியிலே தெரிந்தனவே யல்லாமல் பேசுந்தொனி மட்டும் அவளின் தொண்டைக் குழியினின்றும் வெளிக்கிளம்பி வரவேயில்லை! ஆச்சரியமும் கொக்கரிப்பும் அவளின் நாவை அசைக்க ஒட்டாமல் கட்டி மடக்கிப் போட்டு விட்டதைப் போலாக்கி விட்டது!

'நாளை உமக்குப் பட்டாபிஷேகம் இளவரசியாரே!' என்றார் மதத்தலைவர்,

போதுமா! எங்களின் முயற்சி! என்றார் மந்திரியார் புன்சிரிப்புடன்!

வாக்குறுதி நிறைவேறியது! என்றனர் ஓம்ராக்கள்! பாவம் கொடுத்தவாக்குறுதி மேல் அவ்வளவு அக்கரையவர்களுக்கு!

இளவரசியாருக்கு எங்கள் மேலும் கோபந்தான் — ஆனால் இப்போது தணிந்திருக்கும்! என்று கிண்டல் செய்தனர் பிரபுக்கள்!

சிங்கத்தின் இடத்தில் சிறுநரியா! ஒழிக நரிக்கூட்டம்! வாழ்க எங்கள் இஸ்லாமியச் செல்வம்! வளர்க எங்கள் இணையில்லாப் பெண்ணரசியின் பெரும்புகழ்! என்று வாழ்த்தொலிகளைக் கிளப்பினர் இஸ்லாமியப் பெருமக்கள்!

இவ்வளவு பேர்கள் இவ்வளவு பேசியுங்கூட பதில் ஒன்றுமே பேசவில்லை ரஸியா—பேச முடியவில்லை அவளால்! தலையசைப்பு, புன்சிரிப்பு கூப்பிய கரங்கள் இவைகளினால்தான் பதில்தர முடிந்தது அவளால்! முகத்திலே களிப்பு ரேகைகள் படர்ந்தன. நாணினாள்! தலை கவிழ்ந்தாள்! அன்புப் பார்வையால் அனைவருக்கும் நன்றி சொன்னாள்!

விடை பெற்றனர் வேத விற்பன்னர்கள்! பின் தொடர்ந்தனர் பிரதானியரும் பிரபுக்களும்!

மறுநாள் டெல்லி வீதிகளிலே ஒரே கோலாகலக் காட்சி! இடையிலே இருந்தது ஒரு சில மனிதர்கள்தான் என்றாலும் அலங்காரத்திற்கொன்றும் அங்கே குறைவிருந்ததாகத் தெரியவில்லை. எல்லாம் மின்னல் வேகம்! உணர்ச்சியின் எதிரொலிகள்!

இளவரசி ரஸியாவுக்குப் பட்டம் கிடைக்கிறது—கொடுக்கிறார்கள் கொலுமண்டபத்தார்! என்ற உடன் டெல்லி நகரத்தில் பெருகிய எக்களிப்பும் எழுந்த புதிய புதிய ஏற்பாடுகளும் உளமபடியே அனைவருள்ளத்தையும் கவரத்தான் செய்தது! இஸ்லாமியக் குலவிளக்காம் அந்த அழகு ராணிக்கு இழந்த ஆட்சிப்பீடம் மீண்டும் கிடைக்கிறதென்றால் மாளிகை வாசிகளை விட மக்களுக்குத்தான் அதிலே மகிழ்ச்சியும் ஆர்வமுமிருக்கிறது. அந்த மகிழ்ச்சியின் எதிரொலிதான் டெல்லியைப் பொன்னகராக்கியது. அதுவும் ஓர் நொடியில்.

அந்தப் பொன்னகரத்தின் ஒளி மாளிகையிலேதான் அரசபீடமும் தங்கமணி முடியும் மக்களின் பார்வைக்கு மீண்டும் வைக்கப்பட்டது! கொடுங்கோன்மைக் கறைப்படிந்த செங்கோலும் கூர் வாளும். புனிதப் பரிட்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டது! இஸ்லாமிய ஆலய பூபதிகள் அந்த அங்கீகாரத்தைத் தேடி பெற்றுவர பள்ளிவாசலுக்கு ஓடித் திரும்பினர்.

இளவரசி ரஸியாவுக்கோ புனித நீராட்டுக் கிடைத்தது! பட்டமளித்த பள்ளிவாசலுக்குச் சென்று தொழுகை நடத்தித் திரும்பி வர முத்துப் பல்லக்கும் அரண்மனை வாயிலிலே தயாராகக் காத்திருந்தது!

(தொடரும்)

●

பிறப்பு

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழு உறுப்பினர் தோழர் நாமக்கல் கா. பெருமாள் அவர்களின் வாழக்கைத் துணைவி திருமதி இராஜம்மாளுக்கு திருச்செங்கோடு மருத்துவ மனையில் 14—10—55 அன்று ஒரு பெண் மகவு பிறந்தது. தாயும் சேயும் நலம்.

திராவிடப் பூங்கா

நம்மைப்பற்றி ரேடியோவில் அவனாசியார்!

"அவனாசியார்" என்பது நமது கோவை டி. எஸ். அவனாசிலிங்கனாரேயாவர். அவர் இதுநாள்வரை இல்லறம் மேற்கொள்ளாத—சுவாமி விவேகாநந்தரது சீடர் எனக் கேட்டிருக்கிறோம். அவர் நல்ல தமிழ்ப்பற்றுடையவர், அவர் சில தமிழ் நூற்கள் ஆக்கி யிருக்கிறார். பத்ரிநாத், கேதாரிநாத் சென்றும் திரும்பி யிருக்கிறார். சென்னை பல்கலைக் கழகத்தில் தயாராகிக் கொண்டுவரும் கலைக், களஞ்சியத்திற்கு வித்திட்டவர் என்று அவரைக் கூறலாம். நமது முன்னாள் கல்வி மந்திரியும் அவரே. அவர் தற்போது தில்லி பாராளுமன்றத்தில் உறுப்பினராகப் பணியாற்றுகிறார். அங்கே வடவரின் இந்திப் பித்தம் தெளிய மருந்து கொடுத்துக் கொண்டு வருவதை நாம் அறிவோம்.

ஆனால் அவருக்கு நம் மீது, அதாவது திராவிட இயக்கத்தினர் மீது, நம்பிக்கையில்லை. இருந்த போதிலும் அவர் நம்மை மறப்பதற்கில்லை. ஏன்? மறக்கவும் முடியாது.

அன்று நாம் உயர்நிலைப்பள்ளியில் 'பன்னாடைத் தேர்வு' வேண்டாமென்று குரல் எழுப்பினோம். அக்குரலுக்குச் செவி சாய்த்து, அதுபோது கல்வி மந்திரிப் பதவி வகித்த அவர், "பன்னாடைத் தேர்வு"—S. S. L. C. Selection Examination—என்ற சனியனைத் தொலைத்தார்.

அதே, அவனாசியார்தான் இம்மாதம் ஒன்பதாம் நாள், அனைத்திந்திய வானொலியில் "தற்காலத் தமிழ் இலக்கியம்" என்ற பொருள் பற்றிப் பேசினார்.

தொல்காப்பியங் கூறும் தொன்மை வாய்ந்த தமிழின் இனிமை, மேன்மைகளைப் பற்றிக் கூறினார். என்றும் நிலைத்து நிற்கும் குறள் அறநெறிகளின் ஆழத்தை அளந்து காட்டினார். கம்பன் கவிநயத்தை ஓட்டிக் காட்டினார். அமரகவி பாரதிகண்ட நாட்டுப் பற்றையும், மறு மலர்ச்சியையும், புட்டுச் சொன்னார்.

இன்று தமிழ்ப் பத்திரிகை உலகம் தழைத்துப் பூத்துக் காய்த்துக் குலுங்குங் காட்சிதனைப் படம் பிடித்துக் காட்டினார். தமக்குப் பிடித்தமான இரு பத்திரிகைகளின் பெயர்களை ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் சித்தாந்தம், என்று கூறி மகிழ்ந்தார்.

தமிழ் வளர்ச்சிக் கழகம், சுதந்தர நாளோடு துவங்கி, தாமும் வளர்ந்து—கலைக் களஞ்சியத்தையும் வளர்த்தெடுக்கும் மாட்சியினை வருணித்தார்.

இதன் பிறகுதான் பிடித்தார் ஒருபிடி நம்மை யெல்லாம்—இயக்கத்தினரை!

கூறியது என்னை ?—கூறுதும் ! கேண்மின் !

இக்காலத் தமிழ் இலக்கியத் துறையிலே, இன்னுமொரு சக்தி பாய்ந்தோடி நிற்கிறது. அதுவே மாற்றக் கருத்து, அல்லது நாத்திக இலக்கியம். அதனால் பேராபத்து நாட்டிற்கு ஏற்பட்டிருக்கிறது. இனியும் ஏற்படும். சுயமரியாதை போதிக்கிறோம் என்று கூறிக்கொண்டே, பார்ப்பனன்—சூத்திரன் என்றும், வடக்கு — தெற்கு என்றும், மதம் மக்களுக்கு அபின் என்றும், போதை யூட்டி பேதம் விளைவிக்கிறார்கள். நாடு சீரழிகிறது. எனவே நாடாள்வோர் தலையிட்டு அந்நாத்திக இலக்கியத்தை அழித்தொழிக்க வேண்டும் !........அபயங்கேட்கிறார் அவனாசியார் !

இப்படி திருவாய் மலர்ந்தருளியது எங்கே ? எப்போ ?

இருண்ட வேளையில், தனியறையில், பக்கத்தில் "மைக்" தவிர, நாற்புரச்சுவர் தவிர, வேறெதுவும் இல்லாத போது, தாமே தனியாக எழுதி வைத்ததைக் குரலோடு படித்துக் கொண்டார். அதை வானொலி "பத்திரமாக" எல்லோருக்கும் தெரிவித்தது.

ஏன் ? அன்பர் அவனாசியார் வரட்டுமே வெளியே! அறிஞர் அண்ணாவிடமோ, நாவலர் நெடுஞ்செழியனிடமோ, வந்து சொல்லட்டுமே—"ஐயா, உங்கள் எழுத்துக்களெல்லாம் நாட்டைக் குட்டிச்சுவர் ஆக்குகின்றன. நாட்டைத் திருத்தி, வாழவைக்க, எழுதத் தெரியுமானால் எழுதுங்கள். இல்லையேல் உங்கள் பேனாக்களை உடைத் தெரியுங்கள் !"...என்று.

உடனே கிடைக்குமே பதில், 'பளார்!' 'பளார்!' நாட்டைக் கெடுப்பது நாத்திகமா? அன்று ஆத்திகமா? 'பளார்! பளார்!' நாட்டின் நலன் நாடும் மெய்த் தொண்டர்கள் யாங்களா அன்று நீவிரா?—இந்தாருங்கள் விளக்கம் என்று அளிப்பரே!—அடுக்கிக் கொள்ளட்டுமே அவனாசியார்!

அதைவிடுத்து மூலையில் முணுமுணுப்பு ஏன்?

புரட்சிக் கவி பாரதி தாசனைப் பற்றிக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லையாம். அவர் இக்காலக் கவிஞர்தானாம். ஆயினும் அவர் கருத்தை எப்போதும் ஏற்க எவரும் மறுப்பராம்—அவனாசியார் கூற்று!

இவை யெல்லாம் என்ன பிதற்றல்? மாற்றாரைப் போற்ற மனமோ, சூழ்நிலையோ இல்லையாயின் வேறு வேலை ஏதாகிலுங் கொள்ளக் கூடாதோ? ஆனால் ஒன்று! இன்று தூற்றும் வாய் நாளை போற்றியே தீரும். அதுதான் உலகம் !

●

ஈன்றெடுத்த அறுபது !

பனாமா கால்வாய் பகுதியில் ஒரு உடற்கூறு ஆராய்ச்சிக் கழகம். ஆராய்ச்சிக்கென பாம்பு ஒன்று வந்துற்றது.

அப்பாம்பு அமரிக்காவில் பூமத்திய ரேகையைச் சார்ந்துள்ள அதி சீதோஷ்ணப் பகுதியில் வதியும் பாம்பு. அது கடும் விஷங்கொண்ட மஞ்சள் நாகம். அதன் தலை ஈட்டியின் முகப்பைப் போன்றது. அப்பாம்பினத்தை அங்கே ஃபெர்—டீ—லான்ஸ் [Fer-De-Lance] என்று அழைப்பார்கள்.

அந்த மஞ்சள் நாகத்தின் வயிற்றிலிருந்து ஒன்றன் பின் ஒன்றாக அறுபது உருண்டை வடிவினதான சுருணைகள் வந்து விழுந்துக் கொண்டேயிருந்தன.

தரை தட்டிய சுருணைகள் விரிய ஆரம்பித்து அங்கு மிங்கும் ஓடலாயின. ஒவ்வொரு சுருணையும் ஒவ்வொரு குட்டியாக வெளிப் போந்து அறுபது குட்டிகள் ஆயின.

அவ்வறுபது குட்டிகளும், ஒன்றைப் போல், தாய்ப் பாம்பின் நீளத்தில் ஆறில் ஒரு பங்கு ஆனால் மெல்லிதாய் இருந்தனவாம். குட்டிகள்தானே, அவைகளுக்குக் கூடவா விஷம் இருக்கப் போகிறதென்று சோதித்ததில் சொல்லி வைத்தாற்போல், எல்லாவற்றிற்கும் தேறிய நஞ்சுப் பைகளும் நச்சுப் பற்களும் காணப்பட்டனவாம்.

பிறந்த அவ்வேளையே அக்குட்டிப் பாம்புகள் ஆடு, மாடுகளைக் கடித்தால் கடிபட்டதுகள் உயிர் துறந்தே போகுமாம். அவைகளால் மனிதனுக்கு எத்துணை பெரிய ஆபத்து நிகழ்வதா யிருக்கிறது பார்த்தீர்களா?

ஒன்று, அறுபதை ஈன்றது. அவ்வறுபது, ஒவ்வொன்றும் முறையே அறுபது, அறுபது ஈன்றால், அம்மம்ம! தலைவலிக்கும் அக்கணக்கைப் போடவே! அதுபோது விஷம் எப்படி பெருகுகிறது பார்த்தீர்களா?

●

நகரசபைத் தேர்தல்கள் - நமது தோழர்கள் வெற்றி.

தேவகோட்டை

நடைபெற்ற நகரசபைத் தேர்தலில் இங்கு தி. மு. கழகத் தோழர்கள் மூவர் சுயேச்சை அபேட்சகர்களாக போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கின்றனர்.

அதில் 15வது வார்டில் திரு சா. மீனாட்சி சுந்தரம் அவர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

7-வது வார்டில் நகர தி. மு. கழகச் செயலாளர் திரு உ. சீனிவாசன் அவர்கள் தன்னுடன் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகர் திரு. முகம்மது இப்ராஹிம் அவர்களைவிட 102 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றிபெற்றார்.

11-வது வார்டில் கழகத் தோழர் திரு. இராம வெள்ளையன் அவர்கள் தன்னுடன் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகர் திரு. ராம சுப்பிரமணியன் செட்டியார் அவர்களை 128 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றிருக்கிறார்.

திண்டிவனம்

நகர தி. மு. கழக செயற்குழு உறுப்பினர் திரு. எஸ். நடராசன் சுயேச்சையாக நின்று காங்கிரஸ் அபேட்சகரைத் தோற்கடித்து வெற்றி பெற்றிருக்கிறார். இந்நகரில் கழகத் தோழர்களில் இவர் ஒருவர் மட்டும் தான் போட்டியிட்டார்.

ஈரோடு

10—10—55-ந் தேதி திங்கட்கிழமை ஈரோட்டில் நடைபெற்ற நகரசபை தேர்தலில் நகர திராவிட முன்னேற்றக் கழக செயலாளர் தோழர் எம். சின்னப்பன் அவர்கள் தனித் தொகுதிக்கு பெருவாரியான வோட்டுகள் பெற்று தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.